# இந்திய வரலாறு

## கி.பி.1947 முதல் கி.பி 2014 வரை


தொகுப்பாளர்

முனைவர். **இரா.காஞ்சனாதேவி,**

உதவிப்பேராசிரியர்,

வரலாற்றுத் துறை,

பெரியார் கலைக் கல்லூரி,

கடலூர்.

# பொருளடக்கம்

## பகுதி – 1

1. நேரு சகாப்தம்

1.1 இந்தியா சுதந்திரமடைதல்

1.2 பிரிவினைப் பிரச்சனைகள்

1.3 இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்படுதல்

1.4 சுதேச சமஸ்தானங்களின் இணைப்பு

1.5 மாநிலங்கள் மறுசீரமைப்பு

1.6 ஐந்தாண்டுத் திட்டங்கள்

1.7 ஜவஹர்லால் நேருவின் உள்நாட்டுக் கொள்கை

1.8 நேருவின் வெளிநாட்டுக் கொள்கை

1.9 காஷ்மீர்ப் பிரச்சனை

1.10 இந்திய – சீனப் போர் 1962

பகுதி – 2

1.1 லால்பகதூர் சாஸ்திரி

1.2 இந்திரா காந்தியின் ஆட்சி (1966 – 1975)

1.3 பங்களாதேஷ் உதயம்

இந்தியா – பாகிஸ்தான் போர் 1971

சிம்லா ஒப்பந்தம்

பகுதி – 3

1.1 இந்திரா காந்தி 1971 – 1977

1.2 ஜெயப்பிரகாஷ் நாராயணன்

1.3 அவசர நிலைப் பிரகடனம்

1.4 ஜனதா கட்சி

1.5 நீலநட்சத்திர நடவடிக்கை

1.6 இந்திரா காந்தி 1980 – 1984

1.7 இந்திரா காந்தியின் வெளிநாட்டுக்கொள்கை

## பகுதி – 4

1.1 ராஜிவ் காந்தி

1.2 உள்நாட்டுக் கொள்கை

1.3 வெளியுறவுக் கொள்கை

1.4 இந்தியாவும் சார்க் அமைப்பும்

1.5 தேசிய முன்னணி அரசு – விஸ்வநாத் பரதாப் சிங்

1.6 P.v நரசிம்மராவ்

1.7 புதிய பொருளாதாரக் கொள்கை

1.8 பாபர் மசூதி இடிப்பு

## பகுதி – 5

1.1 ஐக்கிய முன்னணி ஆட்சி

1.2 பிரதமர் வாஜ்பாய் தோற்றம்

1.3 பிரதமர் தேவகவுடா

1.4 இந்திரா குமார்குஜ்ரால்

1.5 அடல் பிகாரி வாஜ்பாய்

1.6 மன்மோகன் சிங்

1.7 நரேந்திர மோடி

1.8 இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பம்சங்கள்

1.9 கல்வி

1.10 திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி

1.11 வேளாண்மை வளர்ச்சி

1.12 கிராமப்புற வளர்ச்சி

1.13 வாணிபம்

1.14 தொழிற்துறை

1.15 தொழிலாளர் கொள்கையும் நலத்திட்டங்களும்

1.16 போக்குவரத்து

1.17 தகவல்தொடர்பு

# 1.1 இந்தியா சுதந்திரமடைதல்
## (INDIAN INDEPENDENCE)

ஆதிக்க ஆட்சியினை ஏற்படுத்துவதிலும், பிரித்தாளும் கொள்கையைச் செயல்படுத்துவதிலும் வெற்றி பெற்ற ஆங்கிலேய அரசு அரசியல் பிரச்சனைகளையும், இனப் பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதில் தோல்வியடைந்தது. அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத்திற்குப் பிறகு அமைக்கப்பட்ட இடைக்கால அரசு செயல்பட முடியாமல் இருந்தது. அரசியல் நிர்ணய சபை முரண்பாடுகளின் மொத்த உருவமாக இருந்தது. மக்கள் கூட்டம் அறிவிழந்து இன அழிப்பில் ஈடுபட்டிருந்தது. எனவே இந்தியப் பிரச்சனையின் சகல தன்மைகளையும் உணர்ந்துவிட்ட நிலையில் அவைகளுக்கெல்லாம் தீர்மானமான முடிவு காண அரசு முயற்சித்தது. அதன் விளைவே அட்லி அறிக்கையாகும். இந்த அறிக்கையில் ஆங்கிலேய அரசு இந்தியாவை விட்டு வெளியேற வேண்டிய நாள், அதிகார மாற்ற முறைகள் ஆகியவை பற்றி திட்டவட்டமாகக் கூறப்பட்டிருந்தன.

### அட்லி அறிக்கை வெளியிடப்பட்ட சூழ்நிலை

a) ***அமைக்கப்பட முடியாமல் போன குறுகிய கால இடைக்கால அரசு***

அமைச்சரவைக் குழுவினர் பரிந்துரை செய்த இடைக்கால அரசு என்ற குறுகிய காலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வைசிராய் வேவல் பிரபு மேற்கொண்டார். ஆனால் இந்த குறுகிய கால (Short Term) இடைக்கால அரசை அமைப்பதிலும் காங்கிரசுக்கும், முஸ்லீம் லீக்கிற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டது. இடைக்கால அமைச்சரவையில் காங்கிரஸ் பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்குச் சமமாக முஸ்லீம் லீக்கின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் இருத்தல் வேண்டும் என்ற லீக்கின் கோரிக்கையை காங்கிரஸ் ஏற்க மறுத்தது. மேலும் இடைக்கால அமைச்சரவையில் முஸ்லீம் உறுப்பினர்கள் அனைவரையும் நியமிக்கும் உரிமையை லீக்கைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கு அளிக்கக் கூடாது என்ற புதிய கோரிக்கையை லீக் எழுப்பியது. இதனையும் காங்கிரஸ் எதிர்த்தது.

இவ்வாறு இடைக்கால அமைச்சரவையின் உறுப்பினர் எண்ணிக்கை குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் இடைக்கால அரசை அமைக்க அமைச்சரவைக் குழுவினர் மறுத்துவிட்டனர். இந்திய அரசியலில் வீழ்ந்து விட்ட முடிச்சுக்கள் மேலும் இறுகி விட்டதைக் கண்ட அமைச்சரவைக் குழுவினர் இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்ற எண்ணத்தில் இங்கிலாந்து திரும்பினர்.

### b) அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள்

அமைச்சரவைக் குழுவின் திட்டமான அரசியலமைப்பு நிர்ணய சபைக்கான தேர்தல்களில் போட்டியிடவும், அதனுடன் சேர்ந்து செயலாற்றவும் காங்கிரஸ் சம்மதித்தது. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் 1946 ஜூன் 29-ல் நடத்தப்பட்டன. மொத்தம் 210 பொதுத் தொகுதி களில் காங்கிரஸ் 199 தொகுதிகளிலும், லீக்கிற்கு ஒதுக்கப்பட்ட 78 தொகுதிகளில் 73 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. அமைச்சரவைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மாநிலக் குழுக்களை ஏற்றுக் கொள்ளாத காங்கிரஸ், அரசியலமைப்பு நிர்ணய சபையில் சேரும் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை அரசியலமைப்பு நிர்ணய சபை மூலமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அரசியலமைப்பு நிர்ணய சபையில் சேர காங்கிரஸ் ஒத்துக் கொண்டதாக நேரு அறிவித்தார்.

நேருவின் கருத்துக்களை அறிந்த லீக்கின் தலைவர் ஜின்னா கொதித் தெழுந்தார். நேருவின் நம்பிக்கைப்படி அரசியலமைப்பு நிர்ணய சபையில் மாற்றங்கள் ஏற்பட்டு நடைமுறைக்கு வந்தால், உருவாகவிருக்கும் பாகிஸ்தான் உருவாகாமலே அழிந்துவிடும் என்று உறுதியாக நம்பினார் ஜின்னா. அதாவது அமைதியான முறையில் சட்டரீதியில் அவரது அரசியல் இலக்கான பாகிஸ்தானைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை இழந்தார் ஜின்னா.

### c) வேவல் பிரபு அமைத்த இடைக்கால அரசு

வைசிராய் வேவல் பிரபு இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். புதிய திட்டத்தை 1946 ஜூலை 22-ல் காங்கிரஸ், லீக் ஆகிய கட்சிகளிடம் தெரிவித்தார். இதன்படி, இடைக்கால அமைச்சரவையில் கட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு அந்தந்தக் கட்சிகளால் அனுப்பி வைக்கப்படும் உறுப்பினர் களை நிராகரிக்கும் உரிமை வேறு எந்தக் கட்சிக்கும் அளிக்கப்படமாட்டாது. அடுத்து, இனப்பிரச்சனையை காங்கிரசும், லீக்கும் சேர்ந்து தீர்த்துக் கொள்ளும் முடிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

வேவல் பிரபுவின் இந்தத் திட்டத்தை ஜின்னா நிராகரித்தார். முஸ்லீம் உறுப்பினர்களை நியமனம் செய்யும் உரிமையை காங்கிரசுக்கு அளிக்கும் எந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். காங்கிரஸ் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது. காங்கிரஸ் ஆதரவுடன் லீக் இல்லாமல் இடைக்கால அரசு ஏற்படுத்தப்பட்டது.

### d) முஸ்லீம் லீக்கின் செயற்குழு தீர்மானம் : 1946, ஜூலை 29

ஆங்கில அரசின் இந்தச் செயலைக் கண்ட ஜின்னா வெகுண்டெழுந்தார். காங்கிரசுக்கு அரசு அதிக அளவில் முக்கியத்துவம் அளிப்பதாகக் குற்றம் சாட்டினார். இனி அவர் எந்தத் திட்டத்தையும், எந்த அரசின் தயவையும் நம்பிச் செயல்படுகிற மனநிலையில் இல்லை அரசியல் ரீதியாக அமைதியான முறையில் பாகிஸ்தானைப் பெற முடியும் என்ற நம்பிக்கையை இழந்தார். இவரது மனநிலைக்கேற்ப 1946, ஜூலை 29-ல் கூடிய முஸ்லீம் லீக் செயற்குழு விபரீதமான தீர்மானம் ஒன்றை இயற்றியது.

''பிரிட்டிஷாரின் அனுமதியுடன் ஜாதி இந்து அரசை நிறுவ காங்கிரஸ் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. இந்தியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் நேர்மையும் நியாயமும் காட்டாமல் இழிவான சக்தி அரசியலின் போக்கு காணப்படுகிறது. எனவே பாகிஸ்தானை அடைய நேரடி நடவடிக்கையில் இறங்க முஸ்லீம் இனத்திற்கு தக்க தருணம் வந்து விட்டது. சட்டரீதியான முறைகளுக்கு முழுக்குப் போடுவோம். நேரடி நடவடிக்கை என்ற துப்பாக்கியைப் பயன்படுத்துவோம்'' என்று செயற்குழுவில் முழங்கினார் ஜின்னா. இதைத் தொடர்ந்து 1946, ஆகஸ்ட் 16-ம் தேதியை நேரடி நடவடிக்கை நாளாகக் கொண்டாட லீக்கின் செயற்குழு தீர்மானம் இயற்றியது. இவ்வாறு பலாத்கார வழியில் பாகிஸ்தானைப் பெற முடிவு செய்தார் ஜின்னா.

### e) லீக்கின் நேரடி நடவடிக்கையும், விளைவும்

மத்திய ஆட்சியில் இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு ஜவஹர்லால் நேருவுக்கு 1946, ஆகஸ்ட் 2-ம் தேதி அழைப்பு விடுத்தார் வேவல் பிரபு. ஐந்து நிர்வாக சபை உறுப்பினர்களை நியமிக்கும்படி ஜின்னாவுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் ஜின்னா ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இதனை அடுத்து இந்தியா வரலாறு காணாத நடவடிக்கையை லீக்கினர் எடுத்தனர். ஏற்கனவே தீர்மானித்தபடி ஆகஸ்ட் 16-ம் தேதி நேரடி நடவடிக்கை நாள் கொண்டாடப்பட்டது.

நேரடி நடவடிக்கை கல்கத்தாவில் ஆரம்பமானது ஆங்கில அரசைக் கண்டிக்கிற, எதிர்க்கும் நோக்கத்துடன் அமைதியான முறையில் ஆரம்பமான நேரடி நடவடிக்கை இந்துக்களை அழிப்பதிலும், வன் செயல்களிலும்

முடிவுற்றது. வங்காளத்திலிருந்த முஸ்லீம் அரசாங்கம் முஸ்லீம்களின் திட்டமிட்ட இந்து எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குச் சாதகமாகச் செயல்பட்டது. ஆகஸ்ட் 16-ம் தேதி அங்கு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது.

இந்துக்கள் சிறுபான்மையினராக இருந்த பகுதிகளில் பயங்கர ஆயுதங்களை ஏந்தி வந்த முஸ்லீம் வெறியர்கள் பட்டப் பகலிலேயே ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் மாங்காயைச் சீவுவது போல் சீவித்தள்ளினர். தீ வைத்தல், கொள்ளையிடுதல் போன்ற வன்செயல்கள் வரம்பில்லாமல் நடந்தன. இந்துக்களின் சொத்துக்களும் உடைமைகளும் சூறையாடப்பட்டன. இப்படியாக கொடியவர்களின் கொலைகாரர்களின் கையில் சிக்குண்டவர்களின் அவலக் குரல்கள், இரத்தத்தை உறைய வைக்கும் ஓலங்கள் கல்கத்தா முழுவதும் எதிரொலித்தன. 16-ம் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் மொத்தம் 6,000 பேர் கொலை செய்யப்பட்டனர். 20,000 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களால் மத்திய அரசு செயலற்ற நிலைக்கு வந்து விட்டது.

## அட்லியின் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு : 1947, பிப். 20

அரசியல் நிர்ணய சபை 1946, டிசம்பர் 9-ம் தேதி கூடியது. இதில் முஸ்லீம் லீக்கின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. இராஜேந்திரப் பிரசாத் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் நோக்கங்கள் பற்றிய தீர்மானம் நிறைவேறியது. ஆனால் முஸ்லீம் லீக்கின் செயற்குழுத் திட்டத்தில் அரசியல் நிர்ணய சபையைக் கலைக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது. இதற்குப் பதிலடியாக அமைச்சரவையிலிருந்து முஸ்லீம் லீக்கின் உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி வைசிராய்க்கு அனுப்பினார்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள்.

இத்தகைய சூழ்நிலையில் தான் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி துணிச்சலான முடிவு ஒன்றை எடுக்கத் தீர்மானித்தார். இதற்கு முக்கியக் காரணம் முஸ்லீம் அமைச்சர்கள் வெளியேறினால் நிலைமை இன்னும் மோசமாகலாம். கலவரம் ஏற்பட்டால் வகுப்புவாதத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் அரசாங்க அதிகாரிகளையும், படையினரையும் நம்பி எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாது. எனவே தான் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதிகார மாற்றம் ஏற்பட வேண்டும் என்று தீர்மானித்தார் அட்லி. நிச்சயமற்ற நிலை நீடிக்கச் செய்யாமல் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கும் நாளை அறிவித்து விட வேண்டும் என்று கருதினார் அட்லி.

எனவே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில் முடிவு பற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை 1947, பிப்ரவரி 20-ம் தேதி வெளியிட்டார். இங்கிலாந்து பிரதமர் அட்லி, அதில் ஆங்கிலேய அரசு இந்தியாவை விட்டு வெளியேற வேண்டிய நாள், அதிகார மாற்ற முறைகள் ஆகியவைகள்

தெளிவாகக் கூறப்பட்டிருந்தன.

a) இந்திய ஆட்சி அதிகாரங்களையும் பொறுப்புகளையும் எல்லாக் கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற பொறுப்புள்ள இந்தியர்கள் அடங்கிய ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்து அதிகார மாற்றம் செய்ய மேதகு அரசரின் அரசு திட்டவட்டமாக முடிவு செய்துள்ளது.

b) ஆனால் துரதிருஷ்டமாக அம்மாதிரியான நிறுவனமோ, அரசியல் அமைப்போ எதுவும் நடைமுறையில் இல்லாமல் போனதுடன் அப்படி ஒரு வாய்ப்பும் இல்லாமலிருக்கிறது என்றாலும் 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் ஏதாவது ஒருநாளில் அதிகார மாற்றம் செய்து கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

c) அதற்குள்ளாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த அரசியலமைப்பு உருவாகவில்லை என்றால் அதிகார மாற்றம் சிறந்த முறையில் நிகழவும், ஆட்சி அதிகாரங்கள் தகுதியானவர்களிடம் போய்ச் சேரவும் பிரிட்டிஷ் அரசு முடிவு செய்யும்.

d) அந்த முடிவின்படி ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் அன்றைய தினத்தில் செயல்பட்டு வருகின்ற மத்திய அரசிடமே ஒப்படைக்கப்படலாம். அல்லது ஆட்சி அதிகாரங்களைத் தேவைகளுக்கேற்ப, வசதிகளுக்கேற்ப பிரித்து மாநில அரசுகளிடமே கூட ஒப்படைக்கப்பட்டு விடலாம்.

e) இந்த முறையிலும் ஏதாவது இடையூறு நேருமேயானால் வேறு ஏதாவது ஒரு வழியில் முரண்பாடற்ற முறையில் இந்திய நலன்கள் காக்கப் படுகிற வகையில் அதிகார மாற்றம் செய்யப்படும்.

f) மேலும் 1948, ஜூன் மாதத்திற்கு முன்னதாக அதிகார மாற்றம் நிகழப் போவதில்லை என்றாலும் கூட இந்தியாவை அந்த மாதிரியான சூழ்நிலைக்குத் தகுதியுடையதாகச் செய்வதற்கான நடவடிக்கைகளை ஆங்கிலேய அரசு மேற்கொள்ளும்.

g) சுதேச அரசுகளை எந்த ஒரு இந்திய அரசிடமும் பிரிட்டிஷ் பேரரசு ஒப்படைக்காது. அதிகார மாற்றம் நடைபெற இருக்கும் தேதிக்குள் அவைகள் சார்பாக எந்தவிதமான முடிவுகளையும் பிரிட்டிஷ் அரசு மேற்கொள்ளாது. அந்த அதிகார மாற்றத் தேதிக்குள் சமஸ்தான அரசுகள் தாமாகவே பிரிட்டிஷ் அரசுடன் ஏதாவது ஒருமுறையில் முடிவுக்கு வரவேண்டும்.

மேற்கண்டவாறு அட்லியின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்த அறிக்கையைத் தொடர்ந்து வேவல் பிரபுவுக்குப் பதிலாக மௌண்ட் பேட்டன் பிரபு மார்ச் மாதத்தில் இந்தியாவின் வைசியராகப் பதவி ஏற்பார் என்றும், இந்தியாவின் வருங்கால வளர்ச்சிக்கும், இன்ப வாழ்விற்கும் உறுதி செய்யக் கூடிய வகையில் பிரிட்டிஷ் இந்தியாவின் அரசாங்கத்தை பொறுப்புள்ள

இந்தியரிடம் ஒப்படைக்கும் பணியை அவர் நிறைவேற்றுவார் என்றும் அறிவித்தார் அட்லி.

அட்லி பிரபுவின் அறிக்கை வெளியான பின்னர் இந்தியாவில் பதட்ட நிலை மேலும் அதிகரித்தது. இந்த அறிக்கையானது ஏற்கனவே கொளுந்து விட்டு பெரும் சுவாலையுடன் எரிகிற நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியது போலானது. இனக் கலவரங்கள் முன்பைவிட அதிக அளவில் நடைபெற்றன. அரசியல் நிர்ணய சபையினால் புதிய அரசியலமைப்பு வடிவம் பெற்று வகைப்படுவதாகத் தெரியவில்லை. இப்படியாக இந்திய அரசியலில் நிச்சயமின்மையும், நம்பிக்கையின்மையும், அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சம் கலந்த எதிர்ப்பார்ப்பும் நிரம்பிக் கிடந்தன. இந்நிலையில் 1947, மார்ச் 24-ம் தேதி வைசியராகப் பதவி ஏற்றார் மௌண்ட் பேட்டன் பிரபு

## இந்தியப் பிரிவினை

உள்நாட்டுப் போர் போன்ற போராட்டத்தில் இறங்கிய காங்கிரசுக்கும் லீகிற்கும் இடையே சமாதானத்தைத் தோற்றுவித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது அவரது உடனடி வேலையாக இருந்தது. காலத்தை வீணாக்காமல் இந்தியத் தலைவர்களைச் சந்தித்தார் மௌண்ட்பேட்டன். அவர்களது கருத்துக்களையும், கொள்கைகளையும் பொறுமையுடனும் பரிவுடனும் கேட்டார். அதன் பின்னர் இந்திய அரசியல், இனப் பிரச்சனை களைப் பற்றிய தனது கருத்துக்களை வெளியிட்டார்.

அதன்படி ஐக்கிய இந்தியா என்ற கொள்கையை செயல்படுத்துவது இயலாத காரியம். இந்திய அரசியல் இனச்சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டுமானால் இந்தியாவைப் பிரிவினை செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்றார் மௌண்ட்பேட்டன். முதலில் படேலையும் நேருவையும் தனது கருத்தை ஏற்குமாறு செய்தார். நேரு முதலில் பிரிவினையை எதிர்த்தாலும் பின்னர் பல காரணங்களை முன்னிட்டு 'பிரிவினை அவசியமான தீமை' என்ற கூறி ஏற்றுக் கொண்டார். ஆனால் மௌண்ட் பேட்டனும் அவரது மனைவியும் நேருவை மயக்கி பிரிவினைத் திட்டத்தை ஏற்கும்படி செய்து விட்டதாக மௌலானா ஆசாத் குற்றம் சாட்டினார்.

ஆனால் நேருவின் கூற்றுப்படி பார்த்தால் அப்போதிருந்த இக்கட்டான சூழ்நிலையில் விடுதலை அடைவதற்கு பிரிவினை ஒன்றே பரிகாரம் என்பதை ஏற்க வேண்டியதிருந்தது. பஞ்சாப் பற்றி எரிந்தது. நாள்தோறும் படுகொலைகள் நடந்த வண்ணம் இருந்தன. இனக்குழப்பங்களாலும், அழிப்புகளாலும் தாக்குண்டு அதிர்ந்து போயிருந்த காங்கிரஸ் தலைவர்களும் இனஅழிப்புக்கு பிரிவினை மேலானது என்று தங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுத்தார்கள்.

காந்தியும் பிரிவினைக் கொள்கையை வன்மையாகக் கண்டித்து வந்தார். 'பிரிவினையை காங்கிரஸ் விரும்பினால் அது தனது பிணத்தின் மீது தான் நடைபெற முடியும்' என்று கூறினார். ஆனால் அவரே பிரிவினை இல்லையென்றால் நாட்டில் ரத்த ஆறு ஓடும் நிலை உருவாகியிருப்பதைக் கண்டு பிரிவினைத் திட்டத்திற்கு ஆதரவளித்தார். ஜின்னாவும் வங்காளம், பாகிஸ்தான் ஆகிய பகுதிகளைக் கொண்டு உருவாகிற பாகிஸ்தான் நாட்டை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தார்.

## மௌண்ட்பேட்டன் திட்டம் : 1947, ஜூன் 3

விரைவில் தீர்வு காணத் துடித்த மௌண்ட்பேட்டன் இந்தியாவில் தன் திட்டம் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்ட பிறகு தன் திட்டத்திற்கான அரசின் இசைவைப் பெற இங்கிலாந்து சென்றார். அங்கு அமைச்சரவையின் பரிசீலனைக்குப் பிறகு அறிக்கை ஒன்று தயாரிக்கப் பட்டது.

இந்த அறிக்கையுடன் இந்தியா திரும்பிய மௌண்ட்பேட்டன் பிரபு இந்தியத் தலைவர்களை அழைத்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் திட்டங்களை விளக்கி அவர்களது ஆதரவைக் கோரினார். காந்திஜியைச் சந்தித்து ஒப்புதலைப் பெற்றார். காங்கிரஸ் செயற்குழுவும் மௌண்ட்பேட்டன் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. முஸ்லீம் லீக்கின் சார்பில் ஜின்னாவும், சீக்கியர் சார்பில் பல்தேவ் சிங்கும் ஆதரவளித்தனர்.

இந்தியத் தலைவர்களின் உறுதிமொழிகள் கிடைத்தவுடன் 1947 ஜூன் 3ம் தேதி புதிய திட்டத்தை பிரதமர் அட்லி வெள்ளை அறிக்கை மூலம் வெளியிட்டார். ஆகஸ்ட் மாதத்தில் அதிகார மாற்றம் ஏற்படுவது உறுதியானது.

## மௌண்ட் பேட்டன் திட்டத்தின் அம்சங்கள்

*1)* இந்தியப் பிரிவினை உறுதி செய்யப்பட்டுவிட்டது. இந்தியாவைப் பிரித்து தனித்தனி நாடுகள் உருவாக்கப்படும். இரண்டு நாடுகளும் அவரவர் விருப்பத்திற்கேற்ப அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ளலாம்.

*2)* பிரச்சனைக்குரிய வங்காளம், அஸ்ஸாம், பஞ்சாப் ஆகியவைகளையும் பிரிவினை செய்ய மாநிலங்களின் பிரிவினை குறித்து அந்த மாநிலங்களின் சட்டமன்றங்கள் தீர்மானிக்கும். பிரிவினை குறித்து முடிவு செய்யப்பட்ட பிறகு அவரவர் விருப்பப்படி நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் நிர்ணய சபையிலோ அல்லது அதிகார மாற்றத்திற்குப் பிறகு உருவாக்கப்படும் அரசியல் நிர்ணய சபையிலோ சேர்ந்து கொள்ளலாம்.

*3)* இதேபோல இந்த மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடி தற்போது டில்லியில் நடைமுறையில் உள்ள அல்லது புதிதாக

உருவாக இருக்கும் அரசியல் நிர்ணய சபையில் சேருவது குறித்து முடிவு செய்து கொள்ளலாம்.

4) இந்தியப் பிரிவினை போது அஸ்ஸாம் மாநிலத்தில் பெருமளவில் முஸ்லீம்கள் வாழும் சில்ஹட் (Sylhet) பகுதியை பாகிஸ்தான் பகுதியான கிழக்கு வங்காளத்துடன் இணைப்பதா அல்லது இந்தியப் பகுதியான அஸ்ஸாம் மாநிலத்திடமே விட்டு வைப்பதா என்பதெல்லாம் சில்ஹட் பகுதியில் வாழும் மக்களின் விருப்பத்தைப் பொறுத்தது ஆகும். மக்களின் விருப்பத்தை அறிய குடியொப்பம் நடத்தி அதன் முடிவின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

5) வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தின் நிலையும் குடியொப்பத்தின் மூலமாகவே முடிவு செய்யப்படும். வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தின் பகுதிகளை இந்தியாவுடன் அல்லது பாகிஸ்தானுடன் இணைப்பதைக் குறித்து அந்தப் பகுதி வாக்காளர்களின் குடியொப்பத்தின் மூலம் அறியப்படும்.

6) பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானியப் பகுதிக்கும் பொருத்தமான முறை ஒன்றை வகுத்து அதன் விருப்பத்திற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

7) இந்திய அரசியல் கட்சிகள் சுமூகமான முறையில் இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு முடிவு செய்யுமேயானால் அதிகார மாற்றம் 1948 ஜூனுக்குப் பதிலாக 1947, ஆகஸ்ட் 14 நள்ளிரவில் நிகழக்கூடும்.

மௌண்ட்பேட்டன் திட்டத்தை காங்கிரஸ், லீக், சீக்கியர்கள் ஆகிய எல்லாக் கட்சிகளுமே ஏற்றுக் கொண்டன. எனவே உடனடியாக அத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் விருப்பப்படி அவைகளின் பிரிவினை ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிழக்கு வங்காளமும், மேற்கு வங்காளமும், கிழக்கு பஞ்சாப்பும் இந்தியாவுடன் சேர விருப்பம் தெரிவித்தன. சில்ஹட் மாவட்டத்தில் நடத்த குடியொப்பத்தின் முடிவின் படி அந்த மாவட்டத்தின் பெருவாரியான பகுதிகள் கிழக்கு பாகிஸ்தானுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டது. பலுசிஸ்தானும், சிந்துவும் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டன. வடமேற்கு எல்லைப்புற மாநிலமும் குடியொப்பத்தின் படி பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டது.

இவ்விதமாகப் பிரிவினை மூலம் மாற்றியமைக்கப்பட்ட மாநிலங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்யச் சர் சிரில் ரெட்கிளிப் (Sir Cyril Redcliffe) என்பவரின் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. சுதேச அரசுகள், பிரிட்டிஷ் பேரரசின் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கப்படும். அவைகளைப் பிரிட்டிஷ் பேரரசுடன் பிணைத்து வைத்திருந்த சட்டமன்றங்கள் அதிகார மாற்றத்தினத்தன்று காலாவதியாகும். எனவே அதற்கு முன்னதாக

அந்தந்த அரசுகளின் விருப்பங்களுக்கேற்ப, வசதிகளுக்கேற்ப இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைய அனுமதிக்கப்பட்டனர்.

## இந்திய சுதந்திரச் சட்டம் : 1947, ஜூலை 18

இந்தியாவுக்கு முறையாக விடுதலை வழங்குவதற்கு இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றுவது அவசியம் ஆகும். எனவே அதற்கான மசோதா ஒன்றைத் தயார் செய்வதற்காக மௌண்ட்பேட்டன் பிரபு இந்தியத் தலைவர்களை அவ்வப்போது கலந்து சில திருத்தங்களைச் செய்தார். அப்போது சீர்திருத்த ஆணையராக இருந்த வி.பி.மேனன் மிகச்சிறந்த முறையில் பணியாற்றி மசோதா நல்ல முறையில் உருவாக அரும்பாடு பட்டார்.

1947, ஜூலை 4-ம் தேதி பொது மக்கள் சபையில் பிரதமர் அட்லி இந்திய சுதந்திர மசோதாவை இறுதி வடிவில் கொண்டு வந்தார். அப்போது எதிர்க் கட்சியாக இருந்த கன்சர்வேட்டிவ் கட்சியும், இந்த மசோதாவை ஆதரித்தது. எனவே பொதுமக்கள் சபையிலும், பிரபுக்கள் சபையிலும் விரைவாக நிறைவேறியது. 1947, ஜூலை 18-ல் மன்னரின் ஒப்புதலைப் பெற்றுச் சட்டமானது. அதன்படி 1947, ஆகஸ்ட் 15-ல் ஆங்கில ஆட்சி முடிவடைந்து, இந்தியா, பாகிஸ்தான் என்ற இரண்டு சுதந்திர நாடுகள் உருவாயின.

இந்தியச்சுதந்திரச்சட்டத்தின்படி,

1. ஆங்கிலப்பேரரசு பெற்றிருந்த இந்திய ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய டொமினியன்களிடம் ஒப்படைக்கப்படும்.

2. இவ்விரு டொமினியன்களும் தனித்தனியே எல்லைகளாக வரையறுக்கப்பட்டுள்ள நிலப் பகுதிகளை ஏற்பதற்கும், மறுப்பதற்கும் அந்த டொமினியன்களுக்கு அதிகாரம் உண்டு.

3. ஒவ்வொரு டொமினியனும், தலைமை ஆளுநர் ஒருவரைப் பெற்றிருக்கும். அவர் அரசியலமைப்பின் தலைவராக விளங்குவார். அவர் சட்டமன்றத்திற்கும் பொறுப்புள்ள அமைச்சரவையின் பரிந்துரைகளின் பேரில் நிர்வாகம் செய்வார்.

4. இரண்டு டொமினியன்களின் அரசியலமைப்பு நிர்ணய சபைகளும் அந்தந்த டொமினியன்களின் விருப்பங்கள், தேவைகளுக்கேற்ப அரசியலமைப்பினைஉருவாக்கும். இந்த அரசியலமைப்பு நிர்ணய சபைகளே அந்தந்த டொமினியன்களின் மத்தியச்சட்டமன்றமாகவும் செயல்படும்.

5. இரண்டு டொமினியன்களிலும் நடைமுறையில் இருந்து வருகிற சட்டங்கள், அந்தந்த டொமினியனின் சட்டமன்றங்களினால் திருத்தியமைக்கப்படும் வரை இருக்கிறபடியே செயல்படும்.

6. 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் அமைப்புகள், செயல் முறைகள் ஆகியவைகளே அவைகள் திருத்தியமைக்கப்படும் வரை நடைமுறையில் செயல்படும். ஆயினும், தலைமை ஆளுநருக்கு அச்சட்டத்தின்படி அளிக்கப்பட்டிருந்த அதிகாரக் கவசங்களும், தனி அதிகாரங்களும் நீக்கப்படும்.

7) 'இந்திய சிவில் சர்வீஸ்' அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற தனிச் சலுகைகளும், அதிகாரங்களும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். பதவிக் காலம் முடிகிற வரை பதவியிலிருக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கும்.

8) இந்திய சமஸ்தான அரசுகளின் மீதுள்ள ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கம் நீக்கப்பட்டு விடும். ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட சமஸ்தான அரசுகள் அவை களின் விருப்பங்களுக்கேற்ப இந்திய யூனியனிலோ, பாகிஸ்தானுடனோ சேர்ந்து கொள்ளலாம்.

9) இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேர அவைகளுக்கு விருப்பமில்லையானால் 'சுதந்திர நாடு' எனப் பிரகடனப்படுத்திக் கொண்டு தனி நாடாகவும் ஆகலாம்.

10) இங்கிலாந்து அரசர் இதுவரை கொண்டிருந்த 'இந்தியப் பேரரசர்' என்ற பட்டமும் நீக்கப்பட்டு விடும்.

இந்தியச் சுதந்திரச் சட்டம் இந்திய விடுதலை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். இதனால் இந்தியாவின் விடுதலை அதிகாரப் பூர்வமாக உறுதி செய்யப்பட்டது. அதிகார மாற்றத்திற்கான விவரங்கள் வரையப்பட்டு இந்திய பாகிஸ்தான் தலைவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது என்று தான் மீதமாக இருந்தது.

1947, ஆகஸ்ட் 11-ம் தேதி பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை கராச்சியில் கூடி ஜின்னாவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. 13-ம் தேதி கராச்சி சென்றடைந்த மௌண்ட்பேட்டன் பிரபு அந்த சபையில் பாகிஸ்தான் விடுதலை பற்றி அறிவித்து உரையாற்றினார். ஆட்சிப் பொறுப்பை பாகிஸ்தானியரிடம் ஒப்படைத்தார். ஆகஸ்ட் 15-ம் தேதி பாகிஸ்தான் தலைமை ஆளுநராக ஜின்னா பதவியேற்றார். லியாகத் அலிகான் தலைமையில் புதிய அமைச்சரவை பதவியேற்றது. இவ்வாறு இந்தியாவின் ஒரு பகுதியான பாகிஸ்தான் அதிகாரப் பூர்வமாகச் சுதந்திர நாடாகியது.

இந்தியாவின் அரசியல் நிர்ணய சபை ஆகஸ்ட் 14-ம் தேதி டில்லியில் கூடியது. இராஜேந்திரப் பிரசாத் தலைமையில் கூடிய அந்த சபையில் ஆர்வமும் உணர்ச்சி வெள்ளமும் பெருக்கெடுத்து ஓடிய சூழ்நிலையில் ஜவஹர்லால் நேரு பேருரையாற்றினார். அப்போது,

''உலகமே உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் வேளையில்,
நள்ளிரவு மணியடிக்கும் நேரத்தில் இந்தியா விடுதலையும்,

வாழ்வும் பெற்று விழித்தெழும். பழமையிலிருந்து வெளியேறி
புதுமையைக் காணவும், ஒரு காலகட்டம் முடிவடைந்து,
நீண்ட காலத்திற்கு அடக்கி வைக்கப்பட்டிருந்த தேசிய
இனத்தின் குரல் கேட்கவும் ஆன நேரம் வரலாற்றில்
எப்போதோ ஒரு முறை தான் வரும்'' என்று குறிப்பிட்டார் நேரு.

மவுண்ட் பேட்டன் இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். நேருவின் தலைமையிலான அமைச்சரவையும் உறுதிமொழி எடுத்துக் கொண்டது. அதன் பிறகு அரசியல் நிர்ணய சபைக்குச் சென்று பிரிட்டிஷ் பேரரசர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்து உரையாற்றினார் மவுண்ட்பேட்டன்.

இவ்வாறு இந்தியா விடுதலை பெற்று சுதந்திர நாடானது. அந்நிய ஆதிக்கம் அழிந்தது. அடிமை இருள் அகன்றது. சுதந்திரச் சூரியன் உதயமானான். 1947, ஆகஸ்ட் 15-ம் தேதி இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். அன்று நாடு முழுவதும் உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது. மக்களின் உற்சாகமும் எல்லை கடந்தது. தலைநகரம் திருவிழாக் கோலம் பூண்டது. நாடு முழுவதிலும் மக்கள் ஒன்று கூடி ஆனந்தப் பள்ளு பாடினர்.

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று
ஆடுவோமே!

# 1.2 பிரிவினைப் பிரச்சனைகள்
## (PROBLEMS OF PARTITION)

நீண்டகாலமாக இருந்த ஆங்கிலேயரின் ஆட்சி 1947,ஆகஸ்ட் 15-ல் முடிவடைந்தது. ஆனால் இந்தியா சுதந்திரம் அடைந்த போது ஒட்டு மொத்த இந்தியாவை இரண்டாகப் பிரித்து ஒன்றை பாகிஸ்தானாகவும் மற்றதை இந்தியாவாகவும் கூறுபோட்ட சம்பவம் சம கால இந்திய வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். இந்தியப் பிரிவினையால் இனப்பாகுபாடு, உடமை இழப்பு மற்றும் உயிர்ப்பலி என பல சேதங்கள் ஏற்பட்டது. இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கிய இங்கிலாந்து பிரிவினை என்ற பெயரின் தீராத வடுவை இந்தியாவுக்கு ஏற்படுத்தி விட்டது. காஷ்மீர் பிரச்சனை முதல் இந்திய எல்லைப் பாதுகாப்பு வரை இன்றுள்ள எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஆரம்பம் இந்தப் பிரிவினையே ஆகும்.

### பிரிவினைக்கான முடிவு எடுக்கப்பட்ட சூழ்நிலை

1947, மார்ச் 24-ல் மௌண்ட்பாட்டன் பிரபு இந்திய வைசிராயாகப் பதவி ஏற்றார். அவர் இந்தியப் பிரிவினை தொடர்பாக இந்திய தலைவர்களிடம் பேச்சு நடத்திய பிறகு 'இந்தியா சுதந்திரம் அடைவதற்கு பிரிவினை ஒன்று தான் வழி' என்ற முடிவுக்கு வந்தார்.

படேலைச் சந்தித்து ஒற்றுமை இல்லாத பலமற்ற பெரிய இந்தியாவை விட, பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அமையும் சுதந்திர இந்தியா வலுவானதாக இருக்கும் என்று கூறினார். இந்தக் கருத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்த படேல் பிரிவினைக்கு சம்மதித்தார்.

இதன் பிறகு நேருவின் நண்பரும், ராஜதந்திரியுமான கிருஷ்ண மேனனிடம் பேசி அவரையும் சம்மதிக்க வைத்தார். கிருஷ்ண மேனன் நேருவை சந்தித்து இந்தியாவுக்கு உடனடியாக சுதந்திரம் வழங்க ஆங்கிலேயர் தயாராகி விட்டனர். பாகிஸ்தான் கோரிக்கை மட்டும் தான் முட்டுக் கட்டையாக உள்ளது. ஜின்னாவும் நாமும் ஒன்றுபட்டு வாழ்வது நடக்காத காரியம். பிரிவினைக்கு சம்மதிப்பதே புத்திசாலித்தனம் என்றார். நேருவும் சம்மதித்தார்.

இதன்பிறகு மௌண்ட் பேட்டன் காந்தியை சந்தித்தார். காந்தி என் பிணத்தின் மீது தான் பிரிவினையை அமுலுக்கு கொண்டு வர முடியும் என்றார். ஆனால் இச்சமயத்தில் நாடு முழுவதும் வகுப்புக் கலவரங்கள் வெடித்தன. பலகாரங்கள் தீப்பற்றி எரிந்தன. எனவே தலைவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க பிரிவினைக்கு சம்மதிக்கிறேன் என்றார் காந்தி. இவ்வாறு கொள்கை அளவில் தேசப்பிரிவினை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன் பிறகு மௌண்ட்பேட்டன் ஜூன் 3-ல் தனது பிரிவினைத் திட்டத்தை வெளியிட்டார். இதனை காந்தி ஏற்றுக் கொண்டார். ஜூன் 10-ம் தேதி முஸ்லீக் பேரவை பிரிவினைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. ஜூன் 14-ல் கூடிய காங்கிரஸ் கமிட்டி பிரிவினைக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றியது.

## பிரிவினைக் கமிஷன் அமைக்கப்படுதல்

இந்தியப் பிரிவினை முடிவான பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சேரவேண்டிய பகுதிகளைப் பற்றிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முறையாக இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒன்று வங்காளத்தின் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக பெங்கால் கமிஷன், மற்றொன்று பஞ்சாப் மாகாணத்தைப் பிரித்து எல்லைகளை நிர்ணயிக்கும் பஞ்சாப் கமிஷன் ஆகும். இந்த இரண்டு கமிஷன்களுக்கும் தலைவராக சிரில் ஜான்ரெட் கிளிப் என்பவர் நியமிக்கப்பட்டார்.

## சிரில் ஜான் ரெட்கிளிப்

இந்தியாவை இரண்டாகத் துண்டு போட்டவர் இந்த ஜான் ரெட்கிளிப் ஆவார். இவர் ஒரு வழக்கறிஞர். இவருக்கு இந்தியாவைப் பற்றி எதுவுமே தெரியாது. ஒரு தடவை கூட இந்தியாவுக்கு வந்தது இல்லை. இந்திய அரசியல் செயல்பாடுகள் பற்றியோ, இந்திய சுதந்திரம் போராட்டம் பற்றியோ தெரியாது. இந்தியாவில் எந்த நதி எந்த மாகாணத்தில் ஓடுகிறது என்றோ, எத்தனை இந்திய மாகாணங்கள் உள்ளன என்றோ தெரியாது. இப்படிப் பட்டவர் தான் இந்தியாவை இரண்டாகப் பிரித்து எல்லைக் கோடுகளை வரைந்தார் என்பது வரலாற்று விசித்திரம் ஆகும்.

1947 ஜூலை 8-ம் தேதி இந்தியா வந்தார் ரெட் கிளிப். அவரோடு மெகாசந்த் மகாஷன், தேஜாசிங், தீன் முகமது, முகமது முனர் ஆகிய நான்கு பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். ஐந்து வாரங்களுக்குள் இந்தியாவை இரண்டாகப் பிரித்து எல்லைக்கோடுகளை உருவாக்கித் தரவேண்டும் என்று ரெட்கிளிப்பிற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரிவினை செய்வதற்குத் தேவையான எல்லா விபரங்களும், 1931-ல் தயாரிக்கப்பட்ட நில வரைபடங்கள், 1941-ம் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆகியவை ரெட்கிளிப்பிடம் தரப்பட்டன. பண்டைய இந்திய

தொடங்கி 19-ம் நூற்றாண்டு இந்திய வரையிலான வரைபடங்கள் அவரது மேஜையில் குவிக்கப்பட்டன. ஆனால் இந்த விபரங்கள் போதுமானதாக இல்லை. பதிவேடுகளில் உள்ள விபரங்களுக்கும் வரைபடத்தில் காணப்பட்ட நிலத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்தது. கடுகுழப்பத்திலும், கண்ணைக் கட்டி காட்டில் விட்ட சூழ்நிலையில் எல்லைக் கோடுகளை நிர்ணயம் செய்தார் ரெட்கிளிப்!

91.8 சதவீதம் முஸ்லீம்கள் வசிக்கும் பலுசிஸ்தானையும், 72.7 சதவீதம் முஸ்லீம்கள் வசிக்கும் சிந்து பகுதியை முழுமையாக பாகிஸ்தானோடு இணைப்பது என்றும், 54.4 சதவீதம் முஸ்லீம்கள் வசிக்கும் வங்காளத்தை இரண்டாகப் பிரித்து கிழக்கு வங்காளத்தை பாகிஸ்தானுடனும், மேற்கு வங்காளத்தை இந்தியாவுடனும் சேர்க்கவேண்டும் என்றும், 55.7 சதவீதம் முஸ்லீம்கள் வாழ்ந்த மேற்கு பஞ்சாபை பாகிஸ்தானுக்குத் தந்து விட்டு கிழக்கு பஞ்சாபை இந்தியாவுடனும் இணைக்க வேண்டும் என்றும் கமிஷன் திட்டமிட்டது.

இதற்கிடையில் நீர்ப்பாசனத்துக்காக அமைக்கப்பட்ட கால்வாய்களை எப்படி பிரிப்பது, தபால் தந்தி மற்றும் ரயில்வே அலுவலகங்கள் மற்றும் நிர்வாகத்தை எப்படி பிரிப்பது என்ற பிரச்சனையும் ஏற்பட்டது. இப்படி பிரச்சனைகள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. ஒரு பக்கம் நேருவும் படேலும் பிரிவினை குறித்த ஆலோசனையை ரெட் கிளிப்போடு நடத்தினர். மறு பக்கம் பாகிஸ்தானுக்கு உரியதைத் தாருங்கள் என்று ஜின்னா மிரட்டிக் கொண்டிருந்தார்.

தனக்குக் கிடைத்த வரைபடங்களையும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும் வைத்துக் கொண்டு இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் எல்லாக் கோட்டை வரைந்து முடித்தார். ரெட் கிளிப் 1947, ஆகஸ்ட் 14-ல் ரெட் கிளிப் தனது பணியை பூர்த்தி செய்துவிட்ட போகிலும் ரெட்கிளிப் அதனை வெளியிடவில்லை.

## இந்திய சுதந்திரமும் வரலாறு காணாத மக்கள் இடப்பெயர்ச்சியும்

யார் எந்தப் பக்கம் பிரிந்து போகப் போகிறார்கள் என்று தெரியாத குழப்பத்தில் தான் ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திரம் அறிவிக்கப்பட்டது. இந்தியக் கொடியுடன் சுதந்திர தினம் கொண்டாடிய ஊர் மறுநாள் பாகிஸ்தானுக்கு பிரிந்து போனது. பாகிஸ்தான் என்று நினைத்து களியாட்டம் போட்ட மக்கள் மறுநாள் இந்தியாவின் பகுதியாகிப் போனார்கள். தாங்கள் எந்த நாட்டில் இருக்கிறோம் என்று தெரியாமல் சுதந்திர தினத்தை மக்கள் கொண்டாடிய அவலமும் நடந்தேறியது.

ஆகஸ்ட் 16-ம் தேதி மாலை 6 மணிக்கு பிரிவினை வரைபடம் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தலைவர்களிடம் கொடுக்கப்பட்டது. மறுநாள்

மக்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டது. அத்துடன் மக்கள் உடனே ஊரைக் காலி செய்து இடப்பெயர்ச்சி செய்ய வேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கப் பட்டது. தங்களுக்கு உரிய நியாயம் கிடைக்கவில்லை என்ற கூக்குரல் இரண்டு பக்கமும் எழுந்தது. ஆனால் அதற்கு மௌண்ட்பேட்டன் செவி சாய்க்க வில்லை.

மாறாக கலவரம் ஏற்படக்கூடும் என்று நினைத்தால் கல்கத்தாவிலும் 50 ஆயிரம் பேர் கொண்ட பாதுகாப்புப் படை நிறுத்தப் பட்டது. ஆனால் அந்தப் படையால் சிறிய கிராமம் வரை பரவிய கிளர்ச்சியையும், வன்முறையையும் கட்டுப்படுத்த முடியவில்லை.

உலக வரலாற்றில் ஒருகோடியே 25 லட்சம் மக்கள் ஒரே நேரத்தில் இடப் பெயர்ச்சி செய்ததே இல்லை. மக்கள் சாரை சாரையாக ஊரைக் காலி செய்து கிளம்பினர். பத்து லட்சத்துக்கும் மேலான மக்கள் அகதிகள் போல நடந்தும், பஸ்கள் மற்றும் ரயில்கள் ஆகியவற்றில் ஏறி பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும், இங்கே இருந்து பாகிஸ்தானுக்கும் சென்றனர். மூன்னு தாரணமற்ற இந்த குடியேற்றத்தின் போது பல்லாயிரக்கணக்கானோர் காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்களால் உயிரிழந்தனர்.

பிரிவினையால் பாதிக்கப்பட்டது சாதாரண மக்கள் தான். அதிலும் சீக்கியர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். தங்களது பூர்வீக நிலங்களை இழந்து அகதிகளாக வெளியேறினர். வீடு, சொத்து, கடைகள் அனைத்தையும் அப்படியே விட்டு விட்டு அவர்கள் மேற்கு பஞ்சாபிலிருந்து துரத்தப்பட்டனர்.

இந்தியப் பிரிவினையின் போது கற்பழிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்துக்கும் மேல் இருக்கும் என்கிறது ஒரு புள்ளி விபரம். கலவரத்தைக் காரணமாகக் கொண்டு பெண்களே அதிகம் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டனர். மேலும் பெண்களின் மார்பில் சூட்டுக் கோலால் இந்து அல்லது முஸ்லீம் அடையாளக்குறி போடப்பட்டதும் நடந்தது.

சமகால இந்திய வரலாற்றில் இருண்ட நாட்கள் என்று அழைக்கப்படும் பிரிவினை காரணமாக இறந்தோரின் எண்ணிக்கை 2 லட்சத்திற்கும் மேலிருக்கும் என்கின்றனர். இனக்கலவரங்களில் இறந்தோர் எண்ணிக்கை பற்றி ஆய்வு செய்த நீதிபதி ஜி.டி ஜோஸ்வா 5 லட்சம் என்றும், பெண்டர்சன் 2 லட்சம் என்றும், எச்.வி. ஹட்சன் 2 லட்சத்தி ஐம்பதாயிரம் என்றும் கணக்கிட்டுள்ளனர். ஐயான் ஸ்டீபன்ஸ் என்பவர் 5 லட்சம் என்றும் எம். எட்வரீட்ஸ் என்பவர் 6 லட்சம் பேர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

7 கோடியே 22 லட்சத்தி 6 ஆயிரம் முஸ்லீம்கள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும், 7 கோடியே 25 லட்சம் சீக்கியர் மற்றும் இந்துக்கள் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும் குடிபெயர்ந்தனர் என்று 1951-ம் வருட கணக்கெடுப்பு கூறுகிறது.

## அகதிகள் பிரச்சனை

பாகிஸ்தானிலிருந்து வெள்ளம் போல் வந்த பத்து லட்சம் அகதிகள் டெல்லியில் குடியேறினர். டெல்லியில் வெடித்த இனக்கலவரம் அகதிகள் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கியது. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் மௌண்ட்பேட்டன், பிரதமர் நேரு, உள்துறை அமைச்சர் வல்லபாய் படேல் ஆகிய மூவரும் அகதிகளின் வருகையால் உருவாகிய சட்ட ஒழுங்கு சீர்குலைவுக்குத் தீர்வு காண்பதில் முனைந்தனர். 1947, செப். 6-ல் அவர்கள் கலந்து பேசி நிலைமையைச் சமாளிக்க ஒரு நெருக்கடி கமிட்டியை அமைக்க முடிவு செய்தனர். அந்தக் கமிட்டி விரைந்து செயல்பட்டது.

இனக்கலவரங்கள் நடந்த காலங்களில் காங்கிரஸ் தலைவர்களிடையே இருந்து வந்த மதசார்பின்மைக் கொள்கைக்குக் கூட சோதனை ஏற்பட்டது. நேரு, ஆசாத் போன்ற தலைவர்கள் தான் இனக்கலவரத்திற்கு எதிரான குரல் கொடுத்தனர். படேல் போன்றோர் இந்து மதவாதிகளுக்கு ஆதரவாக இருந்தனர். இதனை நேரு கடுமையாகக் கண்டித்தார்.

இந்த மாதிரியான நேரங்களில் இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்த முழுமையாகப் பாடுபட்ட ஒரே தலைவர் மகாத்மா காந்திஜி ஆவார். அவர் தனது 77 வயதில் மிகுந்த எதிர்ப்புகளுக்கிடையே வங்காளத்திலும், பீகாரிலும் நடைபெற்ற கலவரங்களை நேரில் பார்த்து, பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

## மதிப்பீடு

மௌண்ட்பேட்டனின் இந்தியப் பிரிவினை இந்தியர்களுக்கும் சாதகமாக இல்லை, பாகிஸ்தானியர்களுக்கும் சாதகமாக இல்லை. மாறாக பிரிட்டிஷ் அரசுக்குச் சாதகமாக இருந்தது. வாழ்நாள் முழுவதும் இந்தியாவும் பாகிஸ்தானும் பகை நாடுகளாகவே இருக்க வேண்டும் என்ற ஆங்கிலேயரின் சதி மிகத்திறமையாக நிறைவேற்றப்பட்டது. மௌண்ட்பேட்டன் அழகாக காய் நகர்த்தி வெற்றி கண்டார்.

ஆட்சி, அதிகாரம் என்றிருந்த இரண்டு தேசத்தலைவர்களும், இடம் பெயர்ந்து போன லட்சக்கணக்கான மக்களைப் பற்றியோ, அவர்கள் வாழ்விடத்தைப் பறிகொடுத்த துக்கத்தைப் பற்றியோ கவலைப்படாமல் புதிய மந்திரி சபையை அமைத்து அரசாளத் தொடங்கினர். இந்தியா ஒருபடிமேலே போய் இந்தியப் பிரிவினையை நடத்திக் காட்டிய மௌண்ட்பேட்டனையே தங்கள் முதல் கவர்னர் ஜெனரலாக நியமித்து தங்களின் பெருந்தன்மையைக் காட்டிக் கொண்டது.

உலகில் எந்த நாட்டிலும் இது போல அந்நியர் ஒருவர் ஒரு கமிஷன் தலைவராக இருந்து ஐந்துவாரங்களுக்குள் ஒரு நாட்டை துண்டு போட்டது நடந்தது இல்லை. பிரிவினையின் வடு இந்தியாவில் இன்றும் ஆழமாக உள்ளது. பிரிவினையின் கசப்பு தான்இந்தியா பாகிஸ்தான் பிரச்சனைகளுக்கு அடிப்படையான காரணமாக அமைந்துள்ளது.

# 1.3 இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்படுதல் (MAKING OF THE CONSTITUTION)

சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு அரசியல் நிர்ணய சபையினால் (Constituent Assembly) அமைக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபை என்பது அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் அமைக்கப்படும் சிறப்பான மன்றமாகும். இந்தியாவில் அரசியலமைப்பு சார்ந்த ஆட்சி முறை என்பதை ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்தினர். 1885-ல் தோன்றிய இந்திய தேசிய காங்கிரஸ் ஆரம்பத்தில் வெறும் கருத்து பரிமாற்ற மன்றமாகவே இருந்தது. பின்னர் கொள்கை முழக்கம் எழுப்பி விடுதலைக்காகப் பாடுபடத் தொடங்கியது.

இந்திய தேசிய காங்கிரஸ் பல்வேறு காலகட்டங்களில் நடத்தப்பட்ட போராட்டங்களைச் சமாளிக்கும் வகையில் ஆங்கில அரசு சில அரசியல் சலுகைகளை வழங்கி வந்தது. இந்தியாவை விட்டு வெளியேறித்தான் ஆக வேண்டும் என்ற உண்மையை ஆங்கில அரசு உணர்ந்த போது இந்திய மக்களுக்கு சுயாட்சிப் பயிற்சி அளிக்க சில முயற்சிகளை மேற்கொண்டது. இந்திய அரசுக்கான ஒரு அரசியலமைப்பை உருவாக்க ஒரு மன்றத்தை உருவாக்கவும் அது ஒப்புக் கொண்டது.

## அரசியல் நிர்ணய சபையின் தோற்றம்

இந்திய அரசியலமைப்பில் உருவாக்க அரசியல் நிர்ணய சபை ஒன்றை அமைக்கவேண்டும் என்ற கருத்து முதன் முதலாக M.N. ராய் என்ற கம்யூனி முன்னோடித் தலைவரால் 1934-ல் எழுப்பப்பட்டது. 1935-ல் முதன் முதலா இந்திய தேசிய காங்கிரஸின் செயற்குழுவில் அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1936-ல் இந்தி தேசிய காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் அரசியல் நிர்ண சபை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. 1938-ல் ஜவஹர்லால் நேரு வெளியார் தலையீடு இல்லாமல் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அடைப்படையில் சுதந்திர இந்தியாவுக்கா அரசியலமைப்பை உருவாக்க அரசியல் நிர்ணய சபை ஒன்றை அமைக்கப்ப

வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் கோரிக்கை விடுத்தார். ஆனால் அரசு இந்த கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை.

1939-ல் இரண்டாவது உலகப்போர் ஆரம்பித்த போது இந்தியாவில் எல்லா தரப்பினரின் ஒத்துழைப்பைப் பெற வேண்டிய அவசியம் ஆங்கில அரசுக்கு ஏற்பட்டது. 1940-ல் வழங்கப்பட்ட ஆகஸ்ட் சலுகையில் கொள்கையளவில் அரசியல் நிர்ணய சபை அமைக்க ஆங்கில அரசு ஒப்புக் கொண்டது.

1942 மார்ச் 22-ல் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்பவர் இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பிறகு இந்தியாவிற்கான சுதந்திர அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான வரைவு திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் முஸ்லீம் லீக் இரண்டு நாட்டிற்கான இரண்டு அரசியல் நிர்ணய சபைகள் தேவை என்ற கிரிப்ஸ் தூதுக் குழுவின் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

இந்தியாவில் 1946-ல் விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது. இரண்டாவது உலகப் போரில் இங்கிலாந்து வெற்றி பெற்றிருந்தாலும் அதிக இழப்பை அடைந்து களைத்துப் போயிருந்தது. அங்கு நடந்த தேர்தலில் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்திருந்தது. இத்தகைய சூழ்நிலையில் இங்கிலாந்து அரசின் நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டது. அதன் விளைவாக காபினட் தூதுக்குழு ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பியது.

காபினட் தூதுக்குழுவின் தலைவராக இருந்தவர் இந்திய விவகார அமைச்சரான பெத்திக் லாரன்ஸ் பிரபு ஆவார். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், ஏ.வி. அலெக்சாந்தர் ஆகியோர் பிற இரண்டு உறுப்பினர்கள் ஆவர். இக்குழு 1946 மார்ச் 24-ல் இந்தியாவுக்கு வந்தது. இந்திய தலைவர்களையும் மக்களையும் சந்தித்து கருத்துக்களைக் கேட்டறிந்து இறுதியாக காபினட் தூதுக்குழு தனது திட்டத்தை 1946, மே 16-ல் வெளியிட்டது. இந்த திட்டத்தில் அரசியலமைப்பு தொடர்பான பல பரிந்துரைகளைச் செய்தது. அதில் முக்கியமான பரிந்துரை அரசியல் நிர்ணய சபையை உருவாக்குதல் பற்றியதாகும்.

## அரசியல் நிர்ணய சபையின் அமைப்பு பற்றிய கேபினட் தூதுக்குழுவின் பரிந்துரைகள்

வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல் நடத்தி அரசியல் நிர்ணய சபையை உருவாக்குவதே சிறந்தது என்று கேபினட் தூதுக்குழு கருதியது. இருந்த போதிலும் அவ்வாறு செய்வதானால் காலதாமதம் அதிகமாகும் என்று கருதியது. எனவே நடைமுறையில் சாத்தியப் படக்கூடிய ஒரு மாற்று வழியாக அப்போது தான் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த பிராந்திய சட்டமன்றங்களைக் கொண்டே அரசியல் நிர்ணய சபையை உருவாக்கலாம் என்று கேபினட் தூதுக்குழு ஆலோசனை வழங்கியது. அச்சபையில் சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம்

கிடைக்கும் வகையில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை பின்பற்றவும் முடிவு செய்தது.

a) கேபினட் தூதுக் குழுவின் பரிந்துரைப் படி 389 உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யப்பட்டது. இவைகளில் பிரிட்டிஷ் இந்திய பகுதியிலிருந்து 292 பிரதிநிதிகள், தலைமை ஆணையர்களின் மாநிலங்களிலிருந்து 4 பிரதிநிதிகள், சுதேச அரசு பகுதிகளிலிருந்து 93 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது.

b) வயது வந்தோர் வாக்குரிமை மூலம் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறைக்கு சமமாக ஏறத்தாழ 10 லட்சம் மக்களுக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டும்.

c) இவ்வாறு பிராந்தியங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்கள் அந்தந்த பிராந்தியங்களில் உள்ள முக்கிய வகுப்புகளிடையே அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாச்சாரப்படி பகுக்கப்படல் வேண்டும்.

d) இவ்வாறு ஒவ்வொரு பிராந்தியங்களுக்கான ஒதுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்த பிராந்தியங்களிலுள்ள அவ்வகுப்பைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இதன் தொடர்பாக கேபினட் தூதுக்குழு பொது, முஸ்லீம், சீக்கியர் என்ற மூன்று வகுப்புகளை அங்கீகரித்தது.

e) மேலும் கேபினட் தூதுக்குழு தன்னிச்சைப்படி பிராந்தியங்களை மூன்று பிரிவாக பிரித்தது.

A. பிரிவில் சென்னை, பம்பாய், ஐக்கிய மாநிலம், பீகார், மத்திய மாநிலம், ஒரிசா ஆகியவை அடங்கின.

B. பிரிவில் பஞ்சாப், வடமேற்கு எல்லை மாநிலம், சிந்து ஆகியவை இருந்தன.

C. பிரிவில் வங்காளமும் அசாமும் இருந்தன.

D) சுதேச அரசுகளின் பிரதிநிதிகள் அந்தந்த அரசுகளின் தலைவர்களால் நியமனம் செய்யப்படுவர்.

காபினட் தூதுக்குழுவில் பரிந்துரை செய்யப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் பல குறைபாடுகள் இருந்தாலும் காங்கிரஸ் அதனை ஒரு இறைமையுடைய சபையாக அங்கீகரிக்க முன் வந்தது. ஆனால் கேபினட் தூதுக்குழுவின் பரிந்துரைகளை ஒட்டுமொத்தாக முஸ்லீம் லீக் ஏற்றுக் கொள்ளலாம். அரசியல் நிர்ணய சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில் முஸ்லீம் லீக் பங்கேற்றாலும் தனிநாடு, தனி அரசியல் நிர்ணய சபை ஆகிய கோரிக்கை

களை முன் வைத்து அச்சபையின் நடவடிக்கைகளில் பங்கேற்க மறுத்து விட்டது.

## அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்

கேபினட் தூதுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் 1946-ஜூலையில் நடத்தப்பட்டது. தேர்தல் களில் காங்கிரஸ் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களுக்கான 296 இடங்களில் காங்கிரஸ் 208, முஸ்லீம் லீக் 73 மற்றவை 15 இடங்கள் ஆகியவற்றை கைப்பற்றின. தேர்தலில் சுதேச அரசுகள் பங்கேற்காததால் அதற்கென்று ஒதுக்கப்பட்ட 93 இடங்கள் நிரப்பப்பட வில்லை.

அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும் இந்து, முஸ்லீம், சீக்கியர், பார்சி, ஆங்கிலோ இந்தியர், இந்திய கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்ட பிரிவினர், பெண்கள் போன்ற இந்திய சமுதாயத்தின் எல்லா பிரிவினரும் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இருந்தன. மேலும் காந்தி, ஜின்னா தவிர அப்போதிருந்த பிரபலமான அரசியல் தலைவர்கள் அனைவரும் இடம் பெற்றிருந்தனர்.

## அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுதல்

இந்திய அரசியல் நிர்ணய சபை நாட்டின் இடைக்கால அரசால் அல்லாமல் ஆங்கில அரசினால் கூட்டப்பட்டதாகும். ஆங்கிலேயர்கள் இந்த அரசியல் நிர்ணய சபையை நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளைச் சார்ந்த பேராளர்களின் மாநாடு என்றே கருதினர். அது தவிர ஆங்கிலேயர்கள் துணை யில்லாமல் இந்தியர்கள் அரசியலமைப்பின் விதிமுறைகளைப் பற்றிய கருத்தொற்றுமை அடைவது இயலாது என்றும் கருதினர்.

திட்டமிட்டப்படி இந்திய அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1946, டிசம்பர் 9-ல் புது டில்லியில் கூடியது. இக்கூட்டத்தில் முஸ்லீம் லீக் கலந்து கொள்ளவில்லை. எனவே 211 உறுப்பினர்களே கலந்து கொண்டனர். பிரெஞ்சு முறைப்படி சபையின் மூத்த உறுப்பினர் டாக்டர் சச்சிதானந்த சின்ஹா என்பவர் சபையின் தற்காலிகத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். 1946, டிசம்பர் 11-ல் இச்சபையின் நிரந்தர தலைவராக டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தும், துணைத்தலைவராக H.C. முகர்ஜியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். B.N. ராவ் என்பவர் அரசியலமைப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

தொடக்கத்திலேயே அரசியல் நிர்ணய சபை இறைமை பெற்ற அமைப்பு எனவும் அதன் செயல்பாட்டில் வெளி சக்தி குறுக்கிட முடியாது எனவும் ராஜேந்திர பிரசாத் அறிவித்தார். 1946-டிசம்பர் 13-ல் ஜவஹர்லால் நேரு

வரலாற்றுப் புகழ் பெற்ற 'நோக்கங்கள் பற்றிய தீர்மானத்தை' (Objective Resolution) கொண்டு வந்தார். இந்த தீர்மானம் மக்களின் எண்ணங்கள் விருப்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது. இதில் காணப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தான் இந்திய அரசியலமைப்பின் முன்னுரை அமைந்தது. இந்த தீர்மானம் சபையால் ஏகமனதாக 1947- ஜனவரி 23-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## இந்திய சுதந்திர சட்டத்திற்குப் பிறகு அரசியல் நிர்ணய சபையில் ஏற்பட்ட மாற்றங்கள்

இந்திய சுதந்திரச் சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் 1947 ஜூலை 4-ல் நிறைவேற்றப்பட்டது. ஜூலை 18-ல் அரசியின் கையொப்பம் பெற்று ஆகஸ்ட் 15-ல் நடைமுறைக்கு இருந்தது. இந்த சட்டம் இயற்றப்பட்ட பிறகு அரசியல் நிர்ணய சபையின் நிலையில் கீழ்க்கண்ட மாற்றங்கள் ஏற்பட்டன.

a) இந்திய அரசியல் நிர்ணய சபை முழுமையான இறைமை பெற்ற ஒரு அமைப்பாக மாறியது. இது தனது விருப்பப்படி எப்படிப்பட்ட அரசியலமைப்பையும் உருவாக்கிக் கொள்ளலாம்.

b) பாகிஸ்தானுடன் சேர்ந்த பகுதிகளுக்கென பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து விலகினர். இதனால் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 389-லிருந்து 299 ஆகக் குறைந்தது (இந்திய மாகாணங்கள் 229, சுதேச மாநிலங்கள் 70)

c) அரசியல் நிர்ணய சபை "சட்டம் இயற்றும் சபையாக'வும் மாநில அதாவது இச்சபை இரண்டு விதமான பணிகளை செய்ய ஆரம்பித்தது. சுதந்திர இந்தியாவுக்கான அரசியலமைப்பை இயற்றுதல், நாட்டின் தேவைக்கான சாதாரணச் சட்டங்களை இயற்றுதல் ஆகிய பணிகளாகும். இப்பணிகள் தனிதனி நாட்களில் செய்யப்படும்.

இவ்வாறு அரசியல் நிர்ணயசபை சுதந்திர இந்தியாவின் முதல் தற்காலிக பாராளுமன்றமாக மாறியது. அரசியல் நிர்ணய சபையாகக் கூடும் போது ராஜேந்திர பிரசாத் தலைவராகவும், பாராளு மன்றமாகக் கூடும் போது G.V மௌலங்கர் தலைவராகவும் செயல்பட்டனர். இவ்விதமான இரண்டு பணிகள் 1947 ஆகஸ்ட் 15 முதல் 1949, நவம்பர் 26-ல் அரசியலமைப்பு உருவாக்கும் பணி நிறைவடைந்த நாள் வரை தொடர்ந்தது. அதன் பின்னர் 1952 - மார்ச் வரை தற்காலிக பாராளுமன்றமாக மட்டும் செயல்பட்டது.

## அரசியல் நிர்ணய சபை ஆற்றிய பிற பணிகள்

இந்தியாவுக்கான அரசியலமைப்பை உருவாக்குதல், சட்டம் இயற்றுதல் ஆகிய பணிகளுடன் கீழ்க்கண்ட பிறபணிகளையும் ஆற்றிய அரசியல் நிர்ணய சபை.

a) *1949-மே மாதம் இந்தியா காமன்வெல்த் உறுப்பினராவதற்கான அங்கீகாரமும் அளித்தது.*

b) *1947 ஜூலை 22-ல் தேசியக் கொடியை அங்கீகரித்தது.*

c) *1950 ஜனவரி 24-ல் தேசிய கீதம் அங்கீகரிக்கப்பட்டது.*

d) *1950 ஜனவரி 24-ல் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக ராஜேந்திர பிரசாத்தை தேர்ந்தெடுத்தது.*

*அரசியலமைப்பு நிர்ணய சபை 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்களில் மொத்தம் 11 கூட்டத் தொடர்களை 165 நாட்களில் நடத்தியது. 60 நாடுகளின் அரசியலமைப்புகளை அலசி ஆய்வு செய்தது. அரசியலமைப்பின் வரைவு* (Draft) *மட்டும் 114 நாட்கள் விவாதிக்கப்பட்டது. இந்த அரசியலமைப்பை உருவாக்க ஏற்பட்ட செலவு 64 லட்சம் ரூபாய் ஆகும்.*

*அரசியல் நிர்ணய சபையின் கடைசிக் கூட்டம் 1950, ஜனவரி 24-ல் நடைபெற்றது. பின்னர் அது தற்காலிக பாராளுமன்றமாக 1952, ஏப்ரல் 17 வரை செயல்பட்டது. இரண்டு அவைகளை உடைய முதலாவது பாராளுமன்றம் 1952 மே மாதம் நடைமுறைக்கு வந்தது.*

## அரசியல் நிர்ணய சபை எதிர்நோக்கிய முக்கிய பிரச்சனைகள்

பல்வேறு இனமொழி சமயங்களைச் சார்ந்த பெரும்பான்மை மக்கள் கல்வியறிவற்றவர்களாக இருந்த இந்திய நாட்டிற்குப் பொருத்தமான ஒரு அரசியலமைபை உருவாக்குதல் என்பது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. எத்தகைய வடிவத்திலான அரசாங்கத்தை அமைப்பது என்பது முக்கிய பிரச்சனையாக இருந்தது. பாராளுமன்ற முறையா, குடியரசுத் தலைவர் முறையா என்ற கேள்வி எழுந்தது. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் தாக்கம் பாராளுமன்ற முறைக்கு ஆதரவான நிலையை ஏற்படுத்தியது.

இந்தியா ஒரு சமய சார்பற்ற நாடாக இருப்பது தொடர்பாகவும் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இந்துமதம், இஸ்லாம், புத்த மதம், சமணம், சீக்கிய மதம், கிறிஸ்தவ மதம் போன்ற பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள் வாழ்வதால் சமய சார்பற்ற தன்மை அவசியம் என வலியுறுத்தப்பட்டது. அப்போது 90 சதவீத மக்கள் இந்துக்களாக இருந்ததால் இந்து மதத்தை அரசு மதமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாதிடப்பட்டது. இந்திய மக்களின் ஒற்றுமை நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சமய சார்பின்மை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அரசியல் நிர்ணய சபையின் முன்நின்ற மற்றொரு பெரிய பிரச்சனை ஆட்சி மொழி பற்றியதாகும். பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழும் நாடு இந்தியா. இந்த மக்களிடையே இணைப்பை ஏற்படுத்தியது ஆங்கிலம். குறிப்பிட்ட எந்த மொழியைப் பேசுவோரும் பெரும்பான்மை பெற்றிருக்கவில்லை. ஆனாலும் இந்தியே ஆட்சி மொழியாக வேண்டும்

என்று வாதிடப்பட்டது. இந்தியும் உருதும் கலந்த இந்துஸ்தான் மொழி ஆட்சி மொழியாக வேண்டும் என்றும் கூறப்பட்டது. மகாத்மா காந்தியும் இக்கருத்தை ஆதரித்தார். இறுதியில் இந்தியே ஆட்சி மொழி என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை, மத்திய மாநில உறவுகள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு போன்ற பிரச்சனைகளிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. இந்தியா போன்ற பரந்த நாட்டிற்கு அரசியலமைப்பை உருவாக்குதல் என்ற கடுமையான பணியை பல்வேறு பிரச்சனைகளுக்கிடையில் அரசியல் நிர்ணய சபை செய்து முடித்தது. அரசியலமைப்பை உருவாக்கும் பணியை எளிதாக்க பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன.

## அரசியல் நிர்ணய சபையின் குழுக்கள்

அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். மொத்தம் 8 பெரிய அளவிலான குழுக்களும், பிற சிறிய குழுக்களும் அமைக்கப்பட்டன. குழுக்களின் பெயர்களும் அதன் தலைவர்களும் கீழே தரப்பட்டுள்ளது.

1. மத்திய அரசு அதிகாரங்கள் பற்றிய குழு - ஜவஹர்லால் நேரு
2. மத்திய அரசியலமைப்புக்குழு - ஜவஹர்லால் நேரு
3. மகாண அரசியலமைப்புக்குழு - சர்தார் படேல்
4. வரைவுக்குழு - டாக்டர் அம்பேத்கார்
5. அடிப்படை உரிமை மற்றும் சிறுபான்மை உரிமை பற்றிய ஆலோசனைக்குழு - சர்தார் படேல்
6. நடைமுறை விதிக்குழு - ராஜேந்திர பிரசாத்
7. மாநிலங்கள் பற்றிய குழு - ஜவஹர்லால் நேரு
8. விரைவுக்குழு - ராஜேந்திர பிரசாத்

## பிற குழுக்கள்

1. அரசியல் நிர்ணய சபையின் பணிகள் பற்றிய குழு - G.V. மௌலங்கர்
2. அலுவல் நடவடிக்கை குழு - K.M. முன்ஷி
3. அவைக்குழு - B. பட்டாபி சீதாராமையா
4. தேசியக் கொடி சம்பந்தப்பட்ட தற்காலிக குழு - ராஜேந்திர பிரசாத்
5. அரசியலமைப்பு வரைவை ஆய்வு செய்யும் சிறப்புகுழு - அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்
6. அறிமுக சான்று கடிதங்கள் குழு - அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்

7. நிதி மற்றும் அலுவலர் குழு - A.N. சின்ஹா
8. இந்தி மொழி பெயர்ப்பு குழு
9. உருது மொழி பெயர்ப்புக்குழு
10. பத்திரிக்கையாளர் குழு
11. 1947-ம் வருட இந்திய சுதந்திரச் சட்ட ஆய்வுக்குழு
12. தலைமை ஆணையர்களின் கீழ் உள்ள மாகாணங்களைப் பற்றிய குழு
13. மொழி வாரி மாகாணங்கள் பற்றிய குழு
14. தலைமை நீதி மன்றம் பற்றிய தற்காலிக குழு
15. நிதி சம்பந்தப்பட்ட விதிகளின் வல்லுநர் குழு

இவை தவிர மேலே கண்ட குழுக்களால் ஏற்படுத்தப்பட்ட பல குறிப்பிட்ட நோக்கக் குழுக்களும் அமைக்கப்பட்டன. மேலும் அரசியல் நிர்ணய சபையே 'அவை நிறைவு குழுவாகவும்' செயல்பட்டது. இக்குழுக் களின் கூட்டங்கள் மிகவும் ரகசியமாக நடத்தப்பட்டன.

## அரசியலமைப்பு வரைவு குழு : Drafting Committee

மேற்கண்ட எல்லா குழுக்களிலும் அதிக முக்கியத்துவம் பெற்றது வரைவுக் குழுவே ஆகும். இது 1947 ஆகஸ்ட் 29-ல் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிடம் தான் அரசியலமைப்பு வரைவைத் தயாரிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. இந்தக் குழுவில் 7 உறுப்பினர்கள் இருந்தனர். இதன் தலைவர் டாக்டர் அம்பேத்கார் ஆவார். இதன் பிற உறுப்பினர்கள் N. கோபால் சாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டாக்டர் K.M. முன்ஷி, சையத் முகமது சாதுல்லா, N. மாதவராவ், T.T. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் ஆவர். இதில் K.M. முன்ஷி மட்டுமே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். மற்றவர்கள் அனைவரும் எந்தக் கட்சியையும் சாராத சட்ட வல்லுநர்கள் ஆவர்.

பல்வேறு குழுக்கள் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவு 1948 பிப்ரவரியில் வெளியிடப் பட்டது. பொது மக்கள் கருத்தறிய சுற்றுக்கு விடப்பட்டது. மக்களால் முன் மொழியப்பட்ட திருத்தங்கள் ஒரு சிறப்புக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப வரைவில் மாற்றங்கள் செய்யப்பட்டு 1948 அக்டோபரில் இரண்டாவது வரைவு வெளியிடப்பட்டது. இந்த வரைவுக் குழு 6 மாதங்கள் 14 நாட்கள் பணி செய்து இறுதி வரைவை தயார் செய்தது.

## அரசியல் நிர்ணய சபையில் அரசியலமைப்பு சட்ட வரைவு சமர்பிக்கப்படுதல்

அரசியலமைப்பின் இறுதிவரைவை டாக்டர் அம்பேத்கார் 1948 நவம்பர் 4 ல் முதல் வாசிப்பிற்காகச் சமர்ப்பித்தார். நான்கு நாட்கள் விவாதத்திற்குப்

பிறகு 1948 நவம்பர் 15-ல் இரண்டாவது வாசிப்பிற்கு விடப்பட்டது. இக்கால கட்டத்தில் 7653 திருத்தங்கள் பரிசீலிக்கப்பட்டு, 2473 திருத்தங்கள் சபையில் விவாதிக்கப்பட்டன.

1949, நவம்பர் 14-ல் அரசியலமைப்பு சட்ட வரைவு மூன்றாவது இறுதி வாசிப்பு நிலையை அடைந்தது. 1949, நவம்பர் 26-ல் அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியல் அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியாக 1950, ஜனவரி 24-ல் உறுப்பினர்கள் அரசியலமைப்பில் கையெழுத்தப் பட்டனர். 299 உறுப்பினர்களில் அன்று வந்திருந்த 284 உறுப்பினர்கள் அரசியலமைப்பில் கையெழுத்திட்டனர்.

இவ்வாறு 1949-நவம்பரில் ஒப்புதல் அளிக்கப்பட்ட அரசியலமைப்பில் 22 பகுதிகள் ஒரு முகவுரை, 395 விதிகள், 8 அட்டவணைகள் இருந்தன. முழு அரசியலமைப்பும் உருவாக்கப்பட்ட பிறகே முகவுரை உருவாக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்பை உருவாக்கியதில் டாக்டர் அம்பேத்காரின் பணி மகத்தானது. எனவே தான் அவர் இந்திய அரசியலமைப்பின் தந்தை என்றும், இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய சிற்பி என்றும், நவீன கால மனு என்றும் புகழப்படுகிறார்.

புதிதாக உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பு 1950, ஜனவரி 26-ல் நடைமுறைக்கு வந்தது. ஜனவரி 26 ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்றால் 1930 ஜனவரி 26-ல் தான் 'பூரண சுயராஜ்ய' நாளாக இந்திய தேசிய காங்கிரசால் கொண்டாடப்பட்டது. அரசியல் நிர்ணய சபை மொத்தம் 11 கூட்டத் தொடர் களை நடத்தியது. 114 நாட்கள் அரசியலமைப்பின் வரைவு விவாதிக்கப் பட்டது. அரசியல் நிர்ணய சபையின் ஆயுட்காலம் 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்களாக இருந்தது.

## அரசியல் நிர்ணய சபை பற்றிய மதிப்பீடு

இந்தியாவுக்கு சிறந்த ஒரு அரசியலமைப்பை உருவாக்கித் தந்த பெருமை அரசியல் நிர்ணய சபையையே ஆகும். ஆனால் அச்சபையைப் பற்றிய சில குறைபாடுகள் சொல்லப்படுகிறது.

a) முதலாவது இது ஒரு முழுமையாக பிரதிநிதித்துவ சபையாக செயல்படவில்லை என்பதாகும். அரசியல் நிர்ணய சபை இந்தியா விடுதலை அடையும் முன்பே உருவாக்கப்பட்டது. இச்சபையின் உறுப்பினர்கள் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படவில்லை. மக்களில் 14 சதவீதம் பேர் மட்டுமே இச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தனர். முஸ்லீம் லீக் கட்சியினர் ஆரம்பம் முதல் விலகியே இருந்தனர். விடுதலைக்குப் பிறகு ஒரு கணிசமான அளவு நிலப்பரப்பு இந்தியாவிலிருந்து பிரிந்தது. எனவே அரசியல் நிர்ணய சபை சரியான பிரதிநிதித்துவ சபையாக அமையவில்லை.

b) இச்சபை ஒரு முழுமையான இறைமை பெற்ற சபையாகவும் இல்லை. காரணம் இந்த சபை ஆங்கில அரசால் அமைக்கப்பட்டது. ஆங்கில அரசின் அனுமதி பெற்றே சபை கூட்டங்களை நடத்தியது.

c) அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே அதிகமாக இருந்தனர். கிரன்வில் அஸ்டிக் என்பவர் கூறியபடி அரசியல் நிர்ணய சபை 'ஒரு கட்சி சபையாகவே' (One party body) காட்சியளித்தது. எனவே தான் இந்த அரசியல் அமைப்பு காங்கிரஸ் கட்சியின் அரசியலமைப்பு என்று குறை சொல்லப்பட்டது.

d) அடுத்ததாக இந்த சபையில் சட்ட வல்லுநர்களும், அரசியல் வாதிகளுமே ஆதிக்கம் கொண்டிருந்தனர். சமுதாயத்தின் பிற பிரிவு மக்களின் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை. எனவே தான் அரசியலமைப்பை உருவாக்க அதிக காலம் எடுத்தது என்றும், அளவுக்கதிகமான நீண்ட அரசியலமைப்பாக உள்ளது என்றும் குறை சொல்லப்படுகிறது. மேலும் இச்சபையில் இந்துக் களின் ஆதிக்கம் இருந்ததாகவும் குறை சொல்லப்படுகிறது.

இப்படி சில குறைபாடுகளை நாம் உணர்ந்தாலும், அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் நல்ல நோக்கத்துடனேயே செயல்பட்டனர். பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பில் காணப்பட்ட சிறப்புத் தன்மைகளைக் கண்டறிந்து அவற்றை இந்திய அரசியலமைப்பில் சேர்த்தனர். பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட இந்தியாவில் இத்தகைய அரசியலமைப்பைத் தான் செயல்படுத்த முடியும்.

அரசியலமைப்பில் அதிகமான குறைபாடுகள் இல்லை. அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பிலிருப்பவர்கள் பொறுப்பில்லாதவர்களாக இருப்பதே அரசியல் சீர்கேட்டிற்கு காரணம் என்று கூறப்படுகிறது. மக்களிடையே காணப்படும் அறியாமை, அரசியல் விழிப்புணர்வின்மை, பொதுவாழ்வில் அக்கறையின்மை, சுயநலத்தன்மை, சாதி சமய வெறி, மொழி வெறி போன்ற காரணங்களால் அரசியலமைப்பின் செயல்பாட்டின் குறைவுகள் பெரிதாக்கப்படுகின்றன.

இந்திய அரசியலமைப்பு 63 ஆண்டுகாலமாக அழியாமல் செயல்பட்டு வருவதே பெரிய சாதனையாகும். மக்களாட்சி முறை அழியாமல் இருப்பதே ஒரு அரசியல் சாதனை ஆகும். இந்த அரசியல் சாதனைகளுக்கு உறுதுணை யாக இந்திய அரசியலமைப்பு அமைந்துள்ளது. அரசியலமைப்பில் காணப்படும் குறைகளுக்குப் பரிகாரம் தேட முடியாது. அரசியலமைப்பை நாம் எப்படி திருத்தி அமைத்தாலும் அது ஒரு நாட்டில் சில மாற்றங்களைக் கொண்டு வருவதற்குரிய கருவியே ஆகும். அதை சரியான முறையில், சரியாக காரியங்களுக்குப் பயன்படுத்தும் பொறுப்பு மக்களாகிய நம் கையில் தான் உள்ளது.

## 1.4 சுதேச சமஸ்தானங்களின் இணைப்பு
## (INTEGRATION OF INDIAN STATES)

1947-48ம் ஆண்டுகளில் இந்திய ஒற்றுமைக்கு மிகப்பெரிய சவாலாக விளங்கியது. அப்போது இந்தியாவில் இருந்த 554 சுதேச சமஸ்தானங்கள் ஆகும். இந்த சமஸ்தானங்களின் மொத்த பரப்பளவு ஐந்து லட்சம் சதுர மைல்கள் ஆகும். இதில் எட்டு கோடியே அறுபத்தைந்து லட்சம் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவைகள் சிறியதும் பெரியதுமாக இந்தியா முழுவதும் பரவிக்கிடந்தன. இந்த சமஸ்தானங்களை சட்டப்படி இந்தியாவுடன் இணைக்க வேண்டியதிருந்தது. இவைகளை ஒன்று சேர்த்து இந்தியாவுடன் இணைத்த பெருமை இரும்பு மனிதர் வல்லபாய் படேலையே சாரும். வல்லபாய் படேல் இந்தியாவின் பிஸ்மார்க் என்று அழைக்கப்படுகிறார்.

### சமஸ்தானங்களின் நிலை

மௌண்ட் பேட்டன் திட்டத்தின்படி இந்தியா பாகிஸ்தான் பிரிவினை உறுதி என்ற சூழ்நிலையில் சமஸ்தானங்கள் தங்களுக்கு சுதந்திரமாக செயல்பட உரிமை உண்டு என்று நினைத்தன. இதனை காங்கிரஸ் தலைவர் களும், இந்திய தேசிய காங்கிரசும் ஏற்றுக் கொள்ளவில்லை. தன் சுதந்திரத்தைப் பறை சாற்றி இந்தியாவின் மற்ற பகுதியிடமிருந்து பிரிந்து தனித்து வாழ எந்த சமஸ்தானத்தையும் அனுமதிக்க முடியாது என்று காங்கிரஸ் கமிட்டி 1947 ஜூன் 15-ம் தேதி தீர்மானித்தது.

இந்தியா டொமினியனாக இருந்த போது பிரிட்டிஷ் அரசின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்த சமஸ்தானங்கள், சுதந்திரமடைந்த பின்பு பிரிட்டிஷ் அரசின் வாரிசாக ஏற்பட்ட இந்தியாவின் மேலாதிக்கத்தின் கீழ் தான் இருக்கும். எந்த நிலையிலும் சமஸ்தானங்கள் சுதந்திரமாக இருக்க முடியாது என்று 1947, ஜூன் 17ல் டாக்டர் அம்பேத்கார் வெளியிட்ட அறிக்கையில் கூறினார்.

### சமஸ்தானங்களின் ஒருங்கிணைப்பு

மத்திய அரசுக்கும் சமஸ்தானங்களுக்குமிடையே ஏற்படும் பிரச்சனை களைத் தீர்ப்பதற்காக 1947 ஜூலை மாதம் 5-ம் தேதி சர்தார் வல்லபாய்

படேலின் தலைமையில் மாநிலங்களுக்கான அமைச்சகம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த அமைச்சகத்தின் செயலரான V.P. மேனன் என்ற அனுபவமும் திறமையும் பெற்ற அதிகாரி நியமிக்கப்பட்டார். படேல் தனது அறிவுக் கூர்மையாலும் அரசியல் அனுபவத்தாலும் ஐக்கிய இந்தியா என்ற குறிக்கோளை அடைய வெகு வேகமாக செயலில் ஈடுபட்டார்.

இந்திய சமஸ்தானங்களை ஒரு குடையில் கீழ் கொண்டு வந்ததில் மௌண்ட் பேட்டன் பிரபுவுக்கு முக்கிய பங்கு உண்டு. அவர் 1947, ஜூலை 25-ம் தேதி இந்திய மன்னர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டினார். 1947, ஆகஸ்ட் 15-ம் தேதியுடன் பிரிட்டிஷ் மேலாதிக்கம் முடிவடைகிறது என்றும், அதற்குள் மன்னர்களின் சமஸ்தானங்கள் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைந்து விட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சுதேச மன்னர்கள் இந்தியாவுடன் சேரும் வகையில் இணைவு பத்திரம் (Instrument of Accession) ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி சுதேச அரசுகள் பாதுகாப்பு, அயல்நாட்டுறவு, போக்குவரத்து, செய்தி தொடர்புகள் ஆகியவற்றை இந்திய அரசுடன் ஒப்படைக்க வேண்டும் என்றும், மற்ற விவகாரங்களில் தங்கள் விருப்பம் போல நடந்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும் படேல் சுதேச மன்னர்களுக்கு இனத்தால், மொழியால், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தால் ஒன்றுபட்ட மக்களை இணைத்து ஐக்கிய இந்தியாவை உருவாக்க ஒத்துழைப்பு தரும்படி வேண்டுகோள் விடுத்தார்.

படேலின் முயற்சியின் விளைவாக பல சுதேச அரசுகள் இந்தியாவுடன் இணைந்தன. இணைய மறுத்த மன்னர்கள் படேலின் எச்சரிக்கையாலும், மக்களின் எதிர்ப்பாலும், தவிர்க்க முடியாத ஆபத்துக்களாலும் இந்திய அரசுடன் இணைவதற்குச் சம்மதித்தனர். இவ்வாறு இணைவு பத்திரத்தில் கையொப்பமிட்ட சமஸ்தானங்கள் இந்திய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டன. ஆனால் ஜூனகாத், ஐதராபாத், காஷ்மீர், ஆகிய சமஸ்தானங்கள் மட்டும் இந்திய அரசுடன் இணைவதற்கு சம்மதிக்கவில்லை.

## 1. ஜூனகாத் இணைப்பு : Accession of Junagadh

ஜூனகாத் சமஸ்தானம் பம்பாய்க்கு வடக்கே மேற்கு கடற்கரையில் அமைந்த சமஸ்தானம் ஆகும். இங்கு வாழ்ந்த மக்களில் 80 சதவீதத்தினர் இந்துக்கள். ஆனால் ஜூனகாத்துக்கு ஒரு முஸ்லீம் நவாப் மகாராஜாவாக இருந்தார். இந்தியா சுதந்திரமடைந்த போது ஜூனகாத் பாகிஸ்தானுடன் இணைவதாக நவாப் அறிவித்தார். இதனை எதிர்த்து மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சியை அடக்க முடியாத நவாப் பாகிஸ்தானுக்கு ஓடி விட்டார். அங்கிருந்த திவான் ஷாநவாஸ் பூட்டோ, ஜூனகாத் நிர்வாகத்தை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அதன்

படி இந்திய அரசாங்கமே ஜூனகாத் நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்றது. பின்னர் அங்கு மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 1948-பிப்ரவரியில் முறையாக இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

## 2. ஐதராபாத் இணைப்பு : Accession of Hydrabad

இந்தியாவின் மிகப்பெரிய சமஸ்தானங்களில் ஐதராபாத்தும் ஒன்று ஆகும். இங்கு வாழ்ந்த பெரும்பான்மை மக்கள் இந்துக்களாவர். ஆனால் ஐதராபாத் நிஜாமாக பத்தேஜங் என்ற முஸ்லீம் இருந்தார். ஐதராபாத் நிஜாம் 1947, ஆகஸ்ட் 15-ம் தேதிக்குள் இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ இணையவில்லை. ஆனால் மௌண்ட் பேட்டன் பிரபுவின் வற்புறுத்துதலின் படி 1947, நவம்பர் 29-ம் தேதி இந்திய அரசு நிஜாமுடன் ஓராண்டு கால நிலை ஒப்பந்தம் (Standstill Agreement) ஒன்று செய்தது கொண்டது. இணைப்பு பிரச்சனையை திருப்திகரமாக தீர்த்து விட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

ஆனால் ஐதராபாத் நிஜாம் முடிந்தால் சுதந்திரமாக இருப்பது இல்லையென்றால் பாகிஸ்தானுடன் இணைத்து விடுவது என்ற முடிவில் இருந்தார். எனவே ஓராண்டு கால நிலை ஒப்பந்தத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஒப்பந்த விதிகளை மீறிக்கொண்டிருந்தார். சமஸ்தானப் படைகளை அதிகரித்தல், தற்காலிகப் படையைத் திரட்டுதல், துணிச்சலாக சில வெளிநாட்டவர் உதவியுடன் ஆயுதங்கள் வாங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டார் ஐதராபாத் நிஜாம். அவருக்கு ஆதரவாக காசிம் ராஸ்வி (Kasim Razvi) என்பவர் தலைமையில் ரசாக்கர்களும் (Razakars) செயல்பட்டனர். 1948, மார்ச் 31-ல் ஆயுத வாரம் (Arms week) ஆரம்பிக்கப் பட்டது. ஐதராபாத் முஸ்லீம்களை இந்தியாவின் மீது படையெடுக்குமாறு தூண்டிவிட்டார் ராஸ்வி.

ஐதராபாத்துடன் இந்திய அரசு நடத்திய பேச்சு வார்த்தை அனைத்தும் தோல்வியடைந்தன. மௌண்ட் பேட்டன் 1948, ஜூன் 18-ல் இந்தியா விலிருந்து புறப்படும் முன்பு எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வி யடைந்தன. பிரதமர் நேரு ஐதராபாத் பிரச்சனைகளுக்கு சமாதானமான தீர்வு காணவே விரும்பினார். சமரச பேச்சுவார்த்தைகளாலும், பொருளாதாரத் தடையாலும், அச்சுறுத்துதலாலும் நிஜாமை பணிய வைத்து விட முடியும் என்று நம்பினார் நேரு.

ஆனால் படேல் முள்ளை முள்ளால் எடுத்துவிட தீர்மானித்தார். சுதந்திர இந்தியாவில் ஐதராபாத் தனித்தீவாக இருப்பது இந்திய உடலில் குத்திய முள்ளாக இருக்கும் என்று கருதினார். எனவே ரத்தம் சிந்தியாவது இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றத் துணிந்தார் படேல். எனவே 1948, செப்-13ம் தேதி ஐதராபாத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை

நாட்டுவதற்காக இந்திய ராணுவம் நுழைந்தது. செப் 18ம் தேதி ஐதராபாத் படைகள் இந்திய தளபதி ஜே.என். சௌத்திரியிடம் சரணடைந்தன. சௌத்திரி அதன் ராணுவ கவர்னராக நியமிக்கப்பட்டார். 1950, ஜனவரி 26-ல் ஹைதராபாத் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

### 3. காஷ்மீர் இணைப்பு: Accession of Kashmir

ஜம்மு காஷ்மீர் என்ற சுதேச அரசு இந்தியாவின் வட பகுதியில் இமயமலைச் சரிவில் அமைந்துள்ள எழில்மிகு பகுதியாகும். 85,000 சதுர மைல் பரப்புடைய இப்பகுதி கிழக்கு உலகின் வெனிஸ் என்றும், ஆசியாவின் சுவிட்சர்லாந்து என்று புகழப்படுகிறது. இப்பகுதி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடைப்பட்ட முக்கியப் பகுதியாகும். இங்கே 80 சதவீதம் மக்கள் முஸ்லீம் ஆவர். ஆனால் காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் என்ற இந்து மன்னரால் ஆளப்பட்டு வந்தது. ஹரிசிங் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைய மறுத்தார். பொது மக்கள் கருத்தை அறிந்த பின்னரே முடிவு செய்யப்படும் என்றார் ஹரிசிங்.

பாகிஸ்தான் முஸ்லீம்கள் அதிகமாக இருந்த காஷ்மீரை தன் அதிகாரத்தின் கீழ் கொண்டு வர விருப்பமாக இருந்தது. எனவே ஹரிசிங் இரு நாடுகளுடனும் நிலை ஒப்பந்தம் (Standstill Agreement) செய்து கொள்ள முடிவு செய்தார். இந்தியா எந்த பதிலும் தெரிவிக்காததால் பாகிஸ்தானுடன் நிலை ஒப்பந்தம் செய்து கொண்டார். இச்சூழ்நிலையில் பாகிஸ்தான் அதிபர் முகமது அலி ஜின்னா மலைவாழ் மக்களை தூண்டி விட்டார். சுமார் ஐயாயிரம் முரட்டு மலை ஜாதியினர் காஷ்மீர் எல்லைக்குள் நுழைந்தனர். 1947, அக்டோபர் 22-ல் காஷ்மீரிலிருந்த கார்கில், டோமல், ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி முஸாபராபாத் பகுதியில் நுழைந்தனர். மக்களை கொடூரமாக கொலை செய்தனர். நகரங்களைக் கொள்ளையிட்டனர்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தான் காஷ்மீர் மன்னருக்குப் புத்தி வந்தது. காஷ்மீர் முழுவதும் பாகிஸ்தான் கைக்குப் போய்விடும் நிலை ஏற்பட்டதும் 1947, அக் 24-ம் தேதி தனது முதல் மந்திரி மெகர்சந்த் மகாஜன் என்பவரை இந்தியாவின் உதவி கேட்டு டில்லிக்கு அனுப்பினார். இந்த வேண்டு கோளை நேரு தனது மந்திரி சபையில் வைத்து ஆலோசனை நடத்தினார். அதன்படி உடனடியாக வி.பி. மேனன் இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்க அனுப்பப்பட்டார். 1947, அக். 25-ம் தேதி இந்தியாவுடன் சேரும் இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் ஹரிசிங். அக். 26-ல் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியானது. இந்த இணைப்பு ஒப்பந்தத்தை காஷ்மீரின் தேசிய மாநாடு என்ற கட்சியின் தலைவராக இருந்த ஷேக் அப்துல்லாவும் ஏற்றுக் கொண்டார்.

1947, அக். 27-ம் தேதி காஷ்மீரிலிருந்த பாகிஸ்தானிய முரட்டு மலைவாழ் மக்களை விரட்டியடிக்க இந்திய ராணுவம் ஜெனரல் திம்மையாவின்

தலைமையில் அனுப்பப்பட்டது. காஷ்மீருக்குச் சென்ற இந்திய ராணுவம் ஆக்கிரமிப்பாளர்களை பின்வாங்கச் செய்தனரேயன்றி அவர்கள் கைப்பற்றிக் கொண்ட பகுதிகளை மீட்கவில்லை. அவர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிக்கு ஆசாத் காஷ்மீர் என்று பெயரிட்டு பாகிஸ்தானுடன் இணைத்து விட்டனர். ஷேக் அப்துல்லா எஞ்சிய ஜம்மு காஷ்மீரின் முதலமைச்சர் ஆனார். ஆக்கிரமிப்பாளர்களை காஷ்மீர்ப் பகுதியிலிருந்து விரட்டுவதற்காக போர் தொடுக்காமல் மௌண்ட் பேட்டனின் ஆலோசனையின் பேரில் ஐ.நா. சபையிடம் புகார் செய்தார் நேரு. இது காஷ்மீர் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கி விட்டது. பாகிஸ்தான் அபகரித்துக் கொண்ட ஆசாத் காஷ்மீரிலிருந்து விலகவில்லை. காஷ்மீர் பிரச்சனை இன்று வரை தீர்க்கப்படவும் இல்லை. இவ்வாறு சுதேச சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு, இந்தியா வலிமைமிக்க நாடானது.

### ஒருங்கிணைப்பும் சுதேச அரசுகளை ஜனநாயகப்படுத்துதலும்

சுதேச அரசுகளை இந்திய அரசுடன் இணைத்ததுடன் சிக்கல்கள் அனைத்தும் முடிவாகி விட்டதாக கருதக் கூடாது. அவைகளை இணைப்பதில் பல விதிமுறைகளை பின்பற்ற வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன.

முதலாவதாக, அவ்வரசுகள் அனைத்தையும் அருகாமையில் உள்ள பெரிய மாநிலங்களுடன் இணைப்பதுடன் அவ்வரசுகளில் உள்ள மக்களும் நிர்வாகத்தில் பங்கேற்கும்படி செய்தல் வேண்டும். அதற்காக மத்திய மாநில அரசுகளின் ஆலோசனையின் படி நவீனப்படுத்தலும் ஜனநாயகப் படுத்துதலும் நடைபெற்றன.

அதன்படி 70 லட்சம் மக்கள் வாழ்ந்த 39 சிறிய அரசுகளைக் கொண்ட சட்டீஸ்கர் அரசுகள் அருகில் உள்ள ஒரிசா மாநிலத்துடன் இணைக்கப் பட்டன. இவ்வரசுகளின் இணைப்பு 1947, டிசம்பர் 14-ம் தேதி சர்தார் வல்லபாய் படேல் மூலம் நடைபெற்றது.

அடுத்தபடியாக 1948 மார்ச் மாதம் பம்பாய் மாநிலத்துடன் 17 தக்காண அரசுகள் இணைந்தன. பின்னர் கோலாப்பூர், பம்பாய் மாநிலத்துடன் இணைந்தது. 1948 ஜூன் மாதம் குஜராத்தில் உள்ள 289 சுதேச அரசுகள் பம்பாய் மாநிலத்துடன் இணைந்தன.

இதைப் போல சென்னை மாநிலத்துடன் பங்காளைப்பள்ளி, புதுக்கோட்டை, சந்தூர் போன்ற அரசுகளும், வங்காள மாநிலத்துடன் கூச் பீகாரும், அஸ்ஸாம் மாநிலத்துடன் காசிக்குன்று பகுதிகளும், உத்திரப் பிரதேசம் மாநிலத்துடன் பெனாரஸ், ரான்பூர் அரசுகளும் இணைந்தன.

இரண்டாவதாக, ஒரு சில அரசுகள் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு இணைக்கப்பட்டன. அவைகள் இமயமலைப் பிரதேசம், விந்திய மலைப்பிரதேசம், கட்சு, பில்ஜாப்பூர், போபால், திரிபுரா, மணிப்பூர் ஆகியவையாகும்.

மூன்றாவதாக, ஒரு சில சிறிய அரசுகளை ஒன்றாக இணைத்து மற்ற மாநில அரசுகள் இயங்குவதைப் போல தனியாக இயங்கும்படி உருவாக்கப்பட்டன. அதன்படி 1948, பிப். 15-ல் கத்தியவார் ஐக்கிய அரசு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அரசில் சுமார் 228 சிறிய அரசுகள் இணைக்கப்பட்டன. 1948, மார்ச் 18-ல் ஆன்வார், பாரத்பூர் ஆகிய அரசுகளை இணைத்து மத்திய ஐக்கிய அரசு தோற்றுவிக்கப்பட்டது. 1948, மே 28-ல் குவாலியர், சித்தூர், மாளவம் ஆகியவை இணைக்கப்பட்டு ஒரு ஐக்கிய அரசு ஏற்படுத்தப்பட்டது. 1948, ஜூன் 20-ல் பஞ்சாப் ஐக்கிய அரசும், பல சிறிய அரசுகளை இணைத்து ராஜஸ்தான் அரசும் உருவாக்கப்பட்டது. 1949, ஜூலை 1-ல் திருவாங்கூரும் கொச்சியும் இணைக்கப்பட்டு திருவாங்கூர் கொச்சி அரசு தோற்றுவிக்கப்பட்டது.

சமஸ்தானங்களையும், அதிகாரத்தையும் ஒப்படைத்ததற்காக அரசர்களுக்கு ஆயுட்கால மானியம் கொடுக்கப்பட்டது. அதற்கு வரி விதிக்கப்படமாட்டாது. 1949-ல் ரூபாய் 4.66 கோடியாக மானியம் கொடுக்கப் பட்டது. அரசர்கள் தங்களுடைய பட்டங்கள், கொடிகள் மற்றும் இதர சம்பிரதாயங் களை வைத்துக் கொள்ளலாம். வாரிசுகள் அரசர் பதவிக்கு வர உரிமை உண்டு. இவை அரசியலமைப்புச் சட்டத்திலேயே சேர்க்கப்பட்டன.

அரசர்களுக்குத் தரப்பட்ட சலுகைகள் மற்றும் மானியங்களைப் பற்றி விமர்சனம் செய்யப்பட்டது. ஆனால் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சமஸ்தானங்களை இந்திய யூனியனோடு இணைத்தது மாபெரும் சாதனை யாகும். அதற்குக் கொடுக்கப்பட்ட விலை குறைவே. சமஸ்தானங்கள் இணைந்த போது இந்திய யூனியனின் பரப்பும், வருமானங்களும் அதிகரித்தன.

1954-ல் புதுச்சேரியும், 1961-ல் கோவாவும் இந்தியாவுடன் இணைக்கப் பட்டன.

இவ்வாறாக வல்லபாய் படேல் சுதேச அரசுகள் அனைத்தையும் இணைத்து இந்திய நாட்டின் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதில் பெரும் பங்காற்றினார்.

# 1.5 மாநிலங்களின் மறுசீரமைப்பு
## (STATE RE-ORGANISATION)

இந்திய சுதேச அரசுகள் ஒருங்கிணைக்கப்பட்ட பின்பு புதிதாக உருவான மாகாணங்கள் பரப்பிலும் மக்கள் தொகையிலும் பொருளாதார அடிப்படையிலும் முக்கியமாக மொழியிலும் முரண்பட்டுக் காணப்பட்டன. ஏனெனில் எந்த ஒரு அடிப்படையான கொள்கையிலும் இணைப்பு ஏற்படுத்தப்படவில்லை. எனவே மாகாணங்களின் எல்லைகளை மேலும் சிறப்பாகவும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலும் மாற்றியமைக்க வேண்டுமென்ற பொதுவான கருத்து நிலவியது. எனவே தற்காலிகமாகவும், பல மொழிகள் பேசுவோரைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த மாநிலங்களின் எல்லைகளை அறிவுப்பூர்வமாகவும், நடைமுறைக்குச் சாத்தியமானதாகவும் மறு சீரமைப்பு செய்ய வேண்டியது இன்றியமையாததும் ஆனது.

**தார் கமிட்டி :** Dar Committe

இந்தியாவில் மொழி அடிப்படையில் மாகாணங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை 1920-ல் நாக்பூரில் கூடிய காங்கிரஸ் மாநாடு ஏற்றுக் கொண்டது. மகாத்மா காந்தியும் மொழி வழி மாகாண மறுசீரமைப்பை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். ஆனால் இந்தியா விடுதலை அடையும் வரை மொழி வழி மாநிலக் கோரிக்கையே காங்கிரசின் கொள்கைகளாக இருந்தது. ஆனால் இப்போது உள்ள சூழ்நிலையில் மொழி அடிப்படையில் மாகாணங்களைப் பிரித்தால் அது மீண்டும் பிரிவினைக்கு வழி வகுக்கும் என்று சில தலைவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் இந்திய அரசியல் நிர்ணய சபை மாநில மறுசீரமைப்பு பற்றி ஆராய ஓய்வு பெற்ற அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.கே. தார் (S.K. Dar) என்பவர் தலைமையில் ஒரு கமிட்டியை 1948-ல் அமைத்தது. இந்த தார் கமிட்டி உறுப்பினர்கள் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தனர். எல்லா இடங்களிலும் மொழி வழி மாகாணக் கோரிக்கை பலமாக இருந்தது. தார் கமிஷன் தான் சமர்ப்பித்த அறிக்கையில் உடனடியாக மொழிவழி மாகாணங்கள் மறுசீரமைக்கப்படுவது விரும்பத்தக்கது அல்ல என்ற கருத்தை

தெரிவித்தது. ஒன்றுபட்ட உறுதியான இந்தியாவைக் காண விரும்பிய பிரதமர் நேருவும் மொழி வழி மாகாண சீரமைப்புக்கு முன்னுரிமை தரவில்லை.

இதே சமயத்தில் 1948-டிசம்பர் மாதம் காங்கிரஸ் கட்சியும் ஒரு கமிட்டியை அமைத்தது. ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், பட்டாபி சீதாராமய்யா ஆகியோரைக் கொண்ட இந்த ஜே.வி.பி (J.V.P.) கமிட்டியும் மொழி வழி மாகாணங்கள் அமைக்கப்படுவதை சில ஆண்டுகளுக்காவது தள்ளிப் போட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

## ஆந்திர மாநிலம் அமைக்கப்படுதல் : 1953

மொழி வழி அடிப்படையில் மாநிலங்கள் மாற்றி அமைக்கப்பட்டால் அது நிர்வாக எளிமைக்கு உகந்தது என்று கருதப்பட்டது. இவ்வாறு மொழி வாரி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்கள் மத்தியில் பரவலாக வலியுறுத்தப்பட்ட நிலையில் தெலுங்கு பேசுபவர்களுக்கென ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வேகம் பெற்றது.

சென்னை மாகாணத்திலிருந்த தெலுங்கர்கள் 1917-லிருந்தே தனி ஆந்திர மாகாணக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். ஏனெனில் சென்னை மாகாணத்தில் தமிழ் பேசுவோரின் ஆதிக்கமே மேலோங்கி இருப்பதாக தெலுங்கு பேசியோர் கருதினர். 1947-ல் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாநில முதலமைச்சராக பதவியேற்ற போது தனி ஆந்திர மாநிலக் கோரிக்கை புது பலம் பெற்றது. 1949, நவம்பர் மாதம் ஆந்திர மாநில காங்கிரஸ் கமிட்டி தனி ஆந்திர மாநிலத்தை உடனடியாக அமைக்கும்படி இந்திய அரசைக் கேட்டு கொண்டது. ஆந்திர மாநிலம் அமைக்கப்படுவதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருந்தாலும் சென்னை நகரை எந்த மாநிலத்தில் சேர்ப்பது என்பது பிரச்சனையாக இருந்தது.

## தனி மாநிலக் கோரிக்கை கிளர்ச்சிகளும் உண்ணாவிரதமும்

ஆந்திர மாநிலம் அமைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க சென்னை மாகாண முதலமைச்சர் குமாரசாமி ராஜா தலைமையில் ஒரு பிரிவினைக் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த கமிட்டி உறுப்பினர்களிடையே தலைநகர், மற்றும் நிதிப்பங்கீடு பற்றிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால் இதனையே காரணமாகக் காட்டி கோரிக்கைகள் முடங்கிவிட்டது. இப்படிப்பட்ட மத்திய அரசின் போக்கு ஆந்திர மக்களிடையே மனவருத்தத்தை ஏற்படுத்தியது. எனவே 1951, ஆகஸ்ட் 15-ம் தேதி சுவாமி சீத்தாராம் என்பவர் ஆந்திர மாநிலம் அமைக்கக்கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். ஆந்திராவில் பதட்ட நிலை ஏற்பட்டது. ஆச்சார்யா வினோபாபாவேயின் வேண்டுகோளுக்கிணங்க தனது 35நாள் உண்ணாவிரதத்தை செப்டம்பர் 20-ம் தேதி முடித்துக் கொண்டார். ஆனால் தனி மாநிலப் பிரச்சனைக்கு முடிவு ஏற்படவில்லை.

1952-ம் ஆண்டில் ஆந்திர மாநிலக்கோரிக்கை ஆர்ப்பாட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தது. ஆந்திர மாநிலக் கோரிக்கைக்கு ஆதரவாக பொட்டி ஸ்ரீராமலு என்பவர் 1952, அக்டோபர் 19-ம் தேதி சாகும் வரை உண்ணா விரதம் ஆரம்பித்தார். நேரு இத்தகைய போராட்டங்களுக்குப் பணிய முடியாது என்று அறிவித்தார். அதே சமயம் சென்னை நகரம் சேராத ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்று ராஜ்ய சபாவில் அறிவித்தார் நேரு. ஆனால் வாக்குறுதியை நம்பி உண்ணாவிரதத்தை விலக்கிக் கொள்ள மறுத்து விட்டார் பொட்டி ஸ்ரீராமுலு. உண்ணாவிரதம் 58-ம் நாளை தாண்டிய போது 1952, டிசம்பர் 15-ம் தேதி ஆந்திர மாநில கோரிக்கைக்காக உயிர் நீத்தார் பொட்டி ஸ்ரீராமுலு.

பொட்டி ஸ்ரீராமுலுவின் உயிர் தியாகத்தால் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. தனி ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்று 1952, டிசம்பர் 19-ல் இந்திய அரசு அறிவித்தது. அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு ஆந்திர மாநிலம் முறையாக அமைக்கப்பட்டது. சி.எம். திரிவேதி ஆளுநராகவும், டி.பிரகாசம் ஆந்திராவின் முதலாவது முதலமைச்சராகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர். 1953- அக்டோபர் முதல் நாள் ஆந்திர மாநிலம் உதயமானது. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதலாவது மாநிலம் ஆந்திரா ஆகும்.

## மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கமிஷன்

### பாசல் அலி கமிஷன் 1953

ஆந்திரா பெற்ற வெற்றி பிற மாநிலங்களிலும், மொழிவாரி மாகாணங் களுக்கான கிளர்ச்சி தொடங்கக் காரணமானது. எனவே மத்திய அரசு 1953 டிசம்பர் மாதம் நீதிபதி பாசல் அலி (Fazal Ali)யைத் தலைவராகக் கொண்ட மாநிலங்களின் மறுசீரமைப்புக் கமிஷன் ஒன்றை அமைத்தது. இக்குழுவில் ஹிருதயநாத் குன்ஸ்ரு, சர்தார் K.M. பணிக்கர் ஆகியோர் உறுப்பினராக இருந்தனர். இக்குழுவினர் நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்து 104 இடங்களில் ஒன்பதாயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களைச் சந்தித்தனர். லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்களையும், கோரிக்கைகளையும் பெற்றுக் கொண்டனர்.

இக்குழு 1955, செப். 30-ல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. மொழி அடிப்படையில் மாகாணங்களை மாற்றியமைக்கப் பரிந்துரை செய்தது. மக்களின் மனநிலை, நிர்வாகம், நீதி, தேசிய உணர்வு போன்ற அனைத்தையும் ஆராய்ந்து அதன் அடிப்படையிலேயே தனது பரிந்துரையை சமர்ப்பித்தது. அவை பின்வருமாறு.

a) எல்லா மாநிலங்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். அவைகளுக்கு மத்திய கூட்டமைப்பில் ஒரே சீரான தகுதி அளிக்கப்பட வேண்டும்.

b) இந்தியா 16 மாநிலங்களாகவும், மூன்று மத்திய நிர்வாகப் பகுதி களாகவும் பிரிக்கப்பட வேண்டும்.

c) திருவாங்கூர், கொச்சி, மைசூர், குடகு, கட்சு, மத்திய பாரத், போபால், பாட்டியாலா, கிழக்கு பஞ்சாப், இமாசலப் பிரதேசம், ஆஜ்மீர் ஆகியவை முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

d) ஆ பிரிவு மாநிலங்களில் குடியரசுத் தலைவரின் ஏஜென்டாகச் செயல்படும் ராஜபிரமுகர்கள் என்ற பதவியை ஒழித்து விட வேண்டும்.

e) இந்தியைத் தவிர பிறமொழிகளைக் கற்பிப்பதற்கும், ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட வேண்டும்.

## மாநில மறு சீரமைப்புச் சட்டம்

பாசல் அலி கமிஷனின் அறிக்கையைப் பற்றி பல கண்டனங்களும், புகழுரைகளும் குவிந்தன. எதிர்கட்சிகள் இப்பிரச்சனையை பெரிதுபடுத்தி காங்கிரஸ் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயன்றன. மேலும் அவை மொழி வெறி உணர்வை தீவிரமாகப் பரப்பின. எனவே பாராளுமன்றம் 1956-ஜூலை மாதம் பாசல் அலி கமிஷனின் பெரும்பான்மையான பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு மாநிலங்களின் மறு சீரமைப்புச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் 1956, ஆகஸ்ட் 31-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த சட்டத்தின்படி 14 மாகாணங்களும், ஆறு மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளும் உருவாக்கப்பட்டன. அவை வருமாறு : அஸ்ஸாம், ஆந்திரப் பிரதேசம், பீகார், பம்பாய், கேரளா, மத்திய பிரதேசம், சென்னை, மைசூர், ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், ஜம்மு காஷ்மீர், ஆகியவையாகும். மேலும் டில்லி, இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், லட்சத் தீவுகள் போன்றவை மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளாகும்.

மேலும் இச்சட்டப்படி தேசிய ஒருமைப்பாட்டைக் கருத்தில் கொண்டு இந்தியா ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு மத்திய அமைச்சர் தலைவராகவும், அந்த மாநிலத்தின் முதல் மந்திரியையும், ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள பிற இரண்டு அமைச்சர் களையும் கொண்ட மண்டலக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுக்கள் மண்டல மாநிலங்களுக்குப் பொதுவான சமூக பொருளாதாரத் திட்டம், போக்குவரத்து, சிறுபான்மையினர் நிலை, உள்ளாட்சி, குடிசைத் தொழில்கள் போன்ற பிரச்சனை குறித்து விசாரித்து தீர்வு காணும்.

## 3. 1956-ம் ஆண்டுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட புதிய மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும்

### மகாராஷ்டிரம், குஜராத்

a) இந்த மொழிவாரி மாநிலங்கள் மறுசீரமைப்பு சில மாநிலங்களைத் திருப்திப்படுத்தவில்லை. பம்பாய் மாநிலத்தில் கணிசமான பகுதியைச் சேர்ந்த மக்கள் குஜராத்தி மொழி பேசினர். எனவே தங்களுக்கென்று தனி மாநிலம் கேட்டுப் போராடினர். சிறிது காலம் தாக்குப்பிடித்த இந்திய அரசு 1960-ல் குஜராத் என்ற 15-வது மாநிலத்தை உருவாக்கியது. மீதி இருந்த பம்பாய் மாநிலத்திற்கு மகாராஷ்டிரா என்று பெயர் சூட்டப்பட்டது.

b) தாத்ரா, நாகர் ஹவேலி ஆகிய பகுதிகள் போர்ச்சுக்கீசிய நாட்டிடமிருந்து 1954-ல் விடுவிக்கப்பட்டது. 1961 வரை அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகி நிர்வாகத்தை நடத்தி வந்தார். 1961-ல் செய்யப்பட்ட 10-வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தாத்ரா, நாகர் ஹவேலி இந்திய யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.

c) கோவா, டையூ, டாமன் 1961 வரை ஒரு போர்ச்சுக்கீசிய பகுதியாகவே இருந்தது. அலைகள் போலீஸ் நடவடிக்கை மூலம் 1961-ல் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. 1962-ல் கொண்டுவரப்பட்ட 12-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி இவைகள் யூனியன் பிரதேசமாக்கப்பட்டது. பின்னர் 1987-ல் கோவா மட்டும் தனி மாநிலமாக்கப்பட்டது. டாமன், டையூ மட்டும் யூனியன் பிரதேசமாக உள்ளது.

d) புதுச்சேரி என்ற முன்னாள் பிரெஞ்சுப் பகுதி, புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். 1954-ல் இப்பகுதி பிரெஞ்சு அரசால் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது. 1962-ல் கொண்டுவரப்பட்ட 14-வது அரசிய்லமைப்பு திருத்தத்தின்படி புதுச்சேரி யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது.

e) நாகா இனத்தவரின் போராட்டம் காரணமாக, அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து நாகாமலைப்பகுதி, டியூன்சாங் பகுதிகள் பிரிக்கப்பட்டு 1963-ல் நாகாலாந்து என்ற 16வது மாநிலம் அமைக்கப்பட்டது.

f) ஹரியானா, சண்டிகார், இமாசாலப்பிரதேசம் 1966-ல் இயற்றப்பட்ட பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டப்படி பஞ்சாப் பிரிக்கப்பட்டு ஹரியானா என்ற 17-வது மாநிலம் உருவாக்கப்பட்டது. மேலும் இதன்படி சண்டிகார் என்ற யூனியன் பிரதேசமும் உருவாக்கப்பட்டது. யூனியன் பிரதேசமாக இருந்த இமாசலப்பிரதேசம் 1971, ஜனவரி 25 முதல் 18-வது மாநிலமாக உயர்த்தப் பட்டது.

g) மணிப்பூர், திரிபுரா, மேகாலயா : 1972, ஜனவரி 21-ல் நடைமுறைக்கு வந்த வடகிழக்குப் பகுதி மறுசீரமைப்புச் சட்டப்படி, இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் பெரும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது.

இதன்படி யூனியன் பிரதேசங்களாக இருந்த மணிப்பூர், திரிபுரா முறையே 19-வது, 20-வது மாநிலமாக சேர்க்கப்பட்டது. 1969-ல் செய்யப்பட்ட 22-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி அஸ்ஸாமில் உருவாக்கப்பட்டிருந்த மேகாலயா என்று சுயாட்சிப் பகுதியும் தற்போது 21-வது மாநிலமாக்கப் பட்டது. மேலும் அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டு மிசோரம், அருணாசலப் பிரதேசம் ஆகியன யூனியன் பிரதேசங்களும் உருவாக்கப்பட்டது.

h) 1947-ம் ஆண்டு வரை சிக்கிம் ஒரு இந்திய சுதேச சமஸ்தானமாகவே இருந்து வந்தது. அது சோக்யால் (Chogyal) என்பவரால் ஆளப்பட்டு வந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு அது இந்தியாவின் பாதுகாப்பு மாநிலமாக (Protectorate State) ஆனது. அதன் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுகளை இந்தியா ஏற்றுக் கொண்டது.

1974-ல் சிக்கிம் இந்தியாவுடன் இணைய விருப்பம் தெரிவித்தது. எனவே 1974-ல் இயற்றப்பட்ட 34-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி சிக்கிம் இந்திய இணை மாநிலமாக (Associate State)ஆக்கப்பட்டது. பின்னர் 1975-ல் செய்யப்பட்ட 35-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி சிக்கிம் இந்தியாவின் 22-வது மாநிலமாக இணைக்கப்பட்டது.

i) மிசோரம், அருணாசலப்பிரதேசம், கோவா : 1987 பிப்ரவரி 20-ல் நடைமுறைக்கு வந்த மிசோரம் மாநில சட்டப்படி மிசோரம் 23-வது மாநிலமாக இணைந்தது. 1987, பிப்ரவரி 20-ல் இயற்றப்பட்ட அருணாசல பிரதேச மாநில சட்டப்படி அருணாசலப் பிரதேசம் 24-வது மாநிலம் ஆனது. 1987-ல் இயற்றப்பட்ட கோவா, டையு, டாமன் மறுசீரமைப்புச் சட்டப்படி கோவா இந்திய யூனியனின் 25வது மாநிலமானது.

j) சட்டீஸ்கார், உத்திரகாண்ட், ஜார்கண்ட் : 2000-ம் ஆண்டு மத்திய பிரதேச மாநிலத்திலிருந்து சில பகுதிகள் பிரிக்கப் பட்டு 26-வது மாநிலமாக சட்டிஸ்கார் உருவாக்கப்பட்டது. அதே ஆண்டு உத்திரபிரதேச மாநிலத்திலிருந்து சில பகுதிகள் பிரிக்கப்பட்டு உத்திரகாண்ட் என்ற 27-வது மாநிலம் உருவாக்கப்பட்டது. மேலும் 2000-ல் பீகார் மாநிலத்திலிருந்து சில பகுதிகள் பிரிக்கப்பட்டு ஜார்கண்ட் என்ற 28-வது மாநிலம் உருவாக்கப் பட்டது.

k) தெலுங்கானா : நீண்டபோராட்டங்களுக்குப் பிறகு 2013 ஜூலை மாதம் ஆந்திர மாநிலத்தின் 10 மாவட்டங்கள். 17 நாடாளுமன்றத் தொகுதிகள், 119 சட்டமன்றத் தொகுதிகள் பிரிக்கப்பட்டு தெலுங்கானா என்ற புதிய

மாநிலம் அமைக்கப்படுவதற்காக அறிவிப்பு வெளியிடப்பட்டது. 2014 ஏப்ரல் மே மாதம் அங்கு தேர்தல் நடத்தப்பட்டது. 2014 ஜூன் 2ல் புதிய தெலுங்கானா மாநிலம் உதயமானது. இது இந்தியாவின் 29-வது மாநிலமாகும்.

இவ்வாறு 1956-ல் இருந்த 14 மாநிலங்கள், 6 யூனியன் பிரதேசங்கள் 2014-ல் 29 மாநிலங்களாகவும், 6 யூனியன் பிரதேசங்களாகவும், 1 தேசிய தலைநகர் பகுதியாகவும் உயர்ந்தது.

## மாநில பெயர் மாற்றங்கள்

முதன் முறையாக 1950-ல் ஐக்கியமாகாணம் என்பது உத்திரப்பிரதேசம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1968-ல் இயற்றப்பட்டு 1969- ஜனவரி 14-ல் நடைமுறைக்கு வந்த மெட்ராஸ் மாநிலம் பெயர் மாற்றச் சட்டப்படி மெட்ராஸ் மாநிலம், தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது.

1979-ல் மைசூர் மாநிலம் கர்நாடகம் என்றும், லட்சத்தீவு, மினிகாய் அமின்திவி தீவு மாநிலம் லக்சத்வீப் மாநிலம் என்று பெயர் மாற்றப்பட்டது. 1992-ல் டெல்லி யூனியன் பிரதேசம் 1991-ம் வருட 69-வது அரசியல் சட்ட திருத்தத்தின்படி தேசிய தலைநகர் டெல்லி பகுதி என்று பெயர் மாற்றப் பட்டது. 2006-ல் உத்திராஞ்சல், உத்திரகாண்ட் என்றும் பாண்டிச்சேரி, புதுச்சேரி என்றும் 2011, மார்ச் 24 முதல் ஒரிசா, ஒடிசா என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## 1.6 முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951–1956)

### நோக்கம்

1951 ஜூலை மாதம் திட்டக் கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்டவரைவை சமர்ப்பித்தது. நேரு அரசாங்கம் பலதரப்பு விமர்சனங்களையும் பரிசீலித்த பின் 1952 டிசம்பர் மாதம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெளியிட்டது. முதல் திட்டம் சுதந்திர இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான "கன்னி முயற்சி" ஆகும். அதன் **மூல நோக்கங்கள்** இரண்டு: 1) உலகப் போர்களாலும், இந்தியப் பிரிவினையாலும் உருக்குலைந்து போயிருந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைத்தல். 2) மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வளமிக்கப் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கல்.

### திட்டம்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றப் பொருள் வளங்களைத் தொழில் நுட்ப ரீதியாகப் பெருக்கி, மனித வளத்தைச் செம்மைப்படுத்தி, மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. பொருள் உற்பத்தியைப் பெருக்கல், தேசிய வருவாயை உயர்த்தல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், நிலையான சொத்துக்களைச் சேர்த்தல் ஆகியவற்றுக்கிடையே சமநிலையை ஏற்படுத்துவது திட்டக் கமிஷனின் முன்னுரிமையாக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் அடுத்துவரும் திட்டங்களுக்கான முன்னோடியாகும். முதல் திட்டம் இந்தியப் பொருளாதார நிலத்தைச் சமன் செய்து அதன் மீது திட்டப் பொருளாதார மாளிகையைக் கட்டுவதற்கான முயற்சியாகும். அம்முயற்சி "**மிகவும் மோசமாகத் தேக்கமுற்றிருந்த பொருளாதாரத்துக்குத் தேவையான குறைந்தபட்ச உந்துதலைக் கொடுத்தது**" என்று குறிப்பிட்டுள்ளார் ஏ.எச்.ஹான்சன்.

**கூட்டுப் பொருளாதாரம் (Mixed Economy)**

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தலையாய நோக்கம் **வளர்ச்சி உத்தி** (Development Strategy)—யை உருவாக்குவதேயாகும். முன்பே தேசிய வருவாயின் விரைவான வளர்ச்சி, வேலைவாய்ப்பு அதிகரிப்பு, வருவாய் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், சேமிப்பு மற்றும் முதலீட்டுப் பெருக்கம், பொருள் உற்பத்தித் தொழில்நுட்ப அபிவிருத்தி, பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பெருக்கல், உற்பத்தியைப் பலவகைப்படுத்துதல் போன்றவை பொருளாதார வளர்ச்சியின் முன் தேவைகள் என்பது உணரப்பட்டிருந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் இவற்றின் மூலம் சோஷலிச பாணியில் சமுதாயத்தை அமைக்க விரும்பினார் நேரு. அதன் விளைவே வளர்ச்சி உத்தியாகும்.

வளர்ச்சி உத்தியின் மூலம் வளர்ச்சியடையாதிருந்த **இந்தியாவை முற்போக்கு முன்னேற்ற நாடாக மாற்ற முடியும்** என்று நம்பினார் நேரு. அதற்குக் குறைந்த முயற்சியால் நிறைந்த வளர்ச்சி விகிதத்தை எட்ட வேண்டும். அதுமட்டுமல்ல, பொருளாதார மாற்றத்துக்கான கால இடைவெளி அதிகமாக இருத்தலாகாது. அதற்கு **ஒரே வழி இந்தியாவை விரைந்து தொழில் மயமாக்குவதேயாகும்.** அடிப்படை கனரக பொருள் உற்பத்தி செய்யும் தொழில்கள் மூலமே இது சாத்தியமாகும். நுகர்வோர் பொருள்களை (Consumer Goods) உற்பத்தி செய்வதால் தேசத்தைத் தொழில்மயமாக்க முடியாது என்று கருதினார் நேரு. உண்மையான தொழில்மயமானால் இந்தியா வெளிநாடுகளிலிருந்து உற்பத்தியாளர் பொருள்களை (Producer Goods) இறக்குமதி செய்வதை வெகுவாகக் குறைத்துக் கொள்ளும்.

இந்தியா தொழில்மயமாவதற்கான முன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின் அதற்கு அதிகமான **முதலீட்டு மூலதனம்** (Investment Capital) தேவை. அதற்கேற்ற **உட்கட்டுமான அமைப்பும்** அவசியம். இவ்விரண்டையும் கொடுக்கும் நிலையில் தனியார் துறை (Private Sector) வளர்ந்திருக்கவில்லை. எனவே, அரசாங்கம் பொருளாதாரப் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. எனவே, உற்பத்தியாளர் பொருள்களுக்கான கடமையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்வது தனியார் துறைக்கு விடப்பட்டது. இரும்பு, எஃகு, மின்சார உற்பத்தி, நிலக்கரி, கனரக இரசாயனத் தொழில் போன்ற அடிப்படைத் தொழில்களை மத்திய அரசாங்கம் தன்வசம் வைத்துக் கொண்டது. அரசாங்கத்தின் பொதுத்துறையும், தனியார் துறையும் இணைந்து பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்டதால் 'கூட்டுப் பொருளாதாரம்' என்று அழைக்கப் படுகிறது.

இந்தியக் கூட்டுப் பொருளாதாரம் சோவியத் ரஷ்யாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி பாணியை முன் மாதிரியாகக் கொண்டது. கூட்டுப் பொருளாதாரத்தின் **சிறப்பியல்புகளாவன:** 1) பொதுத் துறையை அரசாங்கக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு விரைந்து விரிவுபடுத்தல்; 2) அடிப்படை கனரகத் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல்; 3) தனியார் துறை மேற்கொள்ள முடியாத அல்லது மேற்கொள்ள முன்வராத பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் சேவைப் பொறுப்புகளை அரசாங்கம் மேற்கொள்ளல். 'கூட்டுப் பொருளாதாரம்' இந்தியப் பொருளாதாரத்தின் தனிச் சிறப்பாகும்.

**கூட்டுறவு விரிவாக்கம்**

இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு விரிவாக்கத்துக்கு (Expansion of Co-operative Sector) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1956—ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'புதிய

**மதிப்பீடு**

முதல் ஐந்தாண்டுத் திட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் பொருளாதார, சமூக நோக்கங்களுக்குச் செயலுருவம் கொடுப்பதற்கான முயற்சியாகும். நடைமுறையில் இருந்த பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் ஒரு குடையின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. முதல் திட்டம் தேசிய பொருளாதார அணுகுமுறையை அறிமுகப்படுத்தியது. விரைவான தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டுமானத்தைப் பலப்படுத்தியது. நம்பகமான புள்ளி விவரங்கள் இல்லாத போதும் முதல் திட்டம் அறிவுப்பூர்வமாக திட்டப்பட்டு முனைப்பார்வத்துடன் செயல்படுத்தப்பட்டது. விவசாயத்துக்கும், கிராம வளர்ச்சிக்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. உணவு அமைச்சராயிருந்த ஜெயராம் தாஸ், நேரு எதிர்பார்த்த அளவுக்குச் செயல்படவில்லை. நிதி அமைச்சர் ஜான் மத்தாய்க்கு திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியில் நம்பிக்கையில்லை. பல நடைமுறை இடர்ப்பாடுகள் இருந்தன. எனினும், நேரு பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து திட்டமிட்டப் பொருளாதார ஏற்றத்துக்காக விரைந்து செயல்பட்டார் என்று கூறியுள்ளார் எஸ்.கோபால்!

## இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956–1961)

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவதற்கு முன்பே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வரைவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கல்கத்தாவிலிருந்த இந்தியப் புள்ளி விவர நிறுவனத்தின் (Indian Statistical Institutes) பேராசிரியர் **டாக்டர் பி.சி.மகலாநோபிஸ்** (P.C.Mahalanobis) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் தயாரித்த திட்ட வரைவு தக்க மாற்றங்களுடன் **1956** ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. நாட்டின் பொருளாதார – சமூக மாற்றங்களை விரைவுபடுத்தும் வகையில் **'அமைப்பு மாற்றங்கள்'** (Structural Changes) மேற்கொள்ளப்பட்டன. சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. அதற்காக, எட்டாண்டுகளுக்கு முன் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'தொழில் கொள்கை' (Industrial Policy, 1948)–க்கு பதில் **புதிய தொழில் கொள்கைத் தீர்மானம்** (New Industrial Policy Resolution, 1956) ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் விளைவே **'கூட்டுப் பொருளாதாரம்'** ஆகும்.

தொழில் கொள்கைத் தீர்மானம்' பொது மற்றும் தனியார் துறைகளில் கூட்டுறவு முறையைக் கையாள வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டியது. குறிப்பாக விவசாயம், சிறுதொழில், வினியோகம், கட்டுமானம், அத்யாவசியப் பொருள்கள் வழங்கல் ஆகிய துறைகளில் கூட்டுறவு முறை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதில் நேரு அரசாங்கம் குறியாக இருந்தது. அரசாங்க வர்த்தகத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. கூட்டுறவுத் துறை (Co-operative Sector)யை ஊக்குவிப்பதற்கு எப்போதுமில்லாத அளவுக்கு முதலீடு செய்யப்பட்டது.

## கூட்டுறவு முறை விவசாயம்

கூட்டுறவு மூலம் கிராம உயர்வுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கூட்டுறவு முறை விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டது. நில உடைமைகள் சிதறிக் கிடந்தமையால் கூட்டுறவு விவசாயம் சிறந்ததாகக் கருதப்பட்டது. மேலும் இது ஜமீன்தாரி அல்லது அரசாங்க உடைமைக்கு நல்ல மாற்று முறையாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. முன்பே நடைமுறையில் இருந்த சமூக வளர்ச்சித் திட்டமும் தேசிய விரிவுப் பணியும் கூட்டுறவு விவசாயத்தைப் பலப்படுத்த முடுக்கிவிடப்பட்டன. கிராம வாழ்க்கை 1) பல் **நோக்கு கூட்டுறவு சங்கம்; 2) கிராமப் பஞ்சாயத்து; 3) கிராமப் பள்ளி** ஆகிய முப்பெரும் நிறுவனங்களைச் சுற்றிச் சுழல வேண்டும் என்பதே திட்டகர்த்தாக்களின் விருப்பம் ஆகும். இவற்றின் மூலம் இந்தியாவின் **கூட்டுறவுக் காமன்வெல்த்தை** (Co-operative Commonwealth)க் காண முடியும் என்று கனவு கண்டார் நேரு.

## மதிப்பீடு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் **'பெரிய முற்போக்குப் பாய்ச்சல்'** (A Great Leap Forward) என்று புகழப்பட்டது. இதன் சாதனைகள் பெருமைக்குரியவை: 1) திட்ட முதலீடு ரூ.6,750 கோடியில் ரூ.3,650 கோடி பொதுத்துறைக்காகச் செலவிடப்பட்டது; 2) தேசிய வருமானம் 20% ஆக உயர்ந்தது; 3) தனி நபர் வருமானம் ரூ.284லிருந்து ரூ.306 ஆக அதிகரித்தது; 4) விவசாய உற்பத்தி 40% ஆகப் பெருகியது. கிராமக் கைத்தொழில்கள் புத்துயிர் பெற்றன; 5) பொருள் உற்பத்தி இரண்டு மடங்காகப் பெருகியது; 6) முதலீட்டு விகிதம் கணிசமாக அதிகரித்தது.

எனினும் குறைபாடுகள் கவலைக்குரியதாக இருந்தன: 1) ஊகங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வளர்ச்சி மாதிரி (Growth Model) நடைமுறை சாத்தியமற்றது; 2)கிடைத்த நிதி ஆதார வசதிகளுக்கும் முதலீட்டுக் குறியீட்டுக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தது; 3)பொதுத்துறை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 4)பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக இருந்தமையால் இந்தியாவின் அன்னியச் செலாவணி இருப்பை வெகுவாகக் குறைத்து விட்டது; 5) அதன் காரணமாக மத்திய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து பரவலாகக் கடன் வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு உட்பட்டது; 6) எதிர்பார்த்தபடி வேலை வாய்ப்புகள் அதிகரிக்கவில்லை; வருமான ஏற்றத்தாழ்வு குறையவில்லை; பொருளாதார வளம் சரியாகவும் பகிர்ந்தளிக்கப்படவில்லை; சமூக வளர்ச்சித் திட்டம் திருப்திகரமாக செயல்படவில்லை; விவசாயம் மற்றும் சிறுதொழில்கள் பலம் பெறவில்லை.

சுருங்கக் கூறின், சோஷலிச பாணி சமுதாயமும், கூட்டுறவு காமன்வெல்த்தும் கற்பனைக் கோட்டைகளாகிவிட்டன. நேரு சோஷலிச சமுதாயம் பற்றிய துல்லியமான

கருத்துருவாக்கம் செய்து அதற்கேற்ப செயல் திட்டம் தீட்டாமை; அவர் சார்ந்த வகுப்புப் பின்னணி; பலவீனமான, தயங்கிய, முழுமையற்ற முயற்சி, சோஷலிச சமுதாயத் திட்டம் வெற்றி பெறாமைக்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதுகிறார் எஸ்.கோபால். எனினும் நேருவின் சோஷலிச சமுதாய முயற்சி உலக வரலாறு காணாத பரிசோதனையாகும்.

## மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961 – 1966)

முதல் இரண்டு திட்டங்களின் சாதனைகளின் அடிப்படையில் மிகுந்த எதிர்பார்ப்புக் கிடையே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 1961 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின் செயல் உத்தி, விவசாயம்–தொழில், பொருளாதார – சமூக வளர்ச்சி, உள்நாட்டு – வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவற்றுக்கிடையேயான பரஸ்பரச் சார்புடைமையை வலியுறுத்துவதாக இருந்தது. தற்சார்புப் பொருளாதாரமே (Self-relient Economy) இதன் குறிக்கோளாக இருந்தது. மூன்றாவது திட்டம் நீண்டகால வளர்ச்சி மாதிரியை (Long-term growth model) வழிகாட்டியாகக் கொண்டது.

மூன்றாவது திட்டக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் தேசிய வருவாய் 20 சதவிகிதமாக உயர்ந்தது. கனரகத் தொழில்களுக்கு, அதாவது பொதுத் துறைக்கு, தொடர்ந்து முன்னுரிமை கொடுக்கப்பட்டது. வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்ததால் கடன் பொறுப்புகள் பெருகின! சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து (International Monetary Fund) கடன்களைப் பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நிதிப் பற்றாக்குறை, சீன ஆக்கிரமிப்பு (1962), வெளிநாட்டு உதவித் தட்டுப்பாடு, பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு, பஞ்சம் போன்ற காரணங்களால் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. யாவற்றிற்கும் மேலாக நேருவின் மறைவு (1964 மே 27) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடக்கி விட்டது எனலாம்.

# 1.8 நேருவின் வெளிநாட்டுக்கொள்கை
## (FOREIGN POLICY OF NEHRU)

இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் சிற்பி பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார். இந்தியாவுக்கு இவர் வகுத்துக் கொடுத்த கொள்கை அணிசேராக் கொள்கை ஆகும். உலகப்போர்களைத் தொடர்ந்து மீண்டும் ஒரு பேரழிவை பெருமளவில் ஏற்படுத்தக் கூடிய வகையில் நாடுகள் ஒன்றுக்கெதிராக அணிசேரும் அதிகார அரசியலில் இருந்து இந்தியா விலகி நிற்கும் என்று நாடு முறைப்படி விடுதலை பெறுவதற்கு முன்பே நேரு பிரகடனப்படுத்தினார்.

அமைதியைக் காத்து போரைத் தடுப்பதற்கும், காலனி ஆதிக்க ஒழிப்பை விரைவுபடுத்தவும், முழு அணு ஆயுதக்குறைப்பை ஏற்படுத்த அயராது உழைப்பதும் நேருவின் வெளிஉறவுக் கொள்கையின் பணியாக இருந்தது. ஐ.நா. சபைக்கு ஆதரவு, உலக அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவி, ஆசிய ஆப்பிரிக்கா கண்டங்களில் உள்ள மக்கள் சுதந்திரமாக வாழ ஆதரவு போன்ற கொள்கைகளை ஆதரித்தார். நேரு பின்பற்றிய வெளிஉறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களை இனி காணலாம்.

### அணிசேராக் கொள்கை

இந்தியா ஒரு மாபெரும் நாடு. தொன்மையான நாடு. காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த நாடு. இந்தியா வல்லரசு நாடுகளின் குரலை எதிரொலிக்கக்கூடாது என்றும் இந்தியாவுக்கென்று தனியான கொள்கை, தனியான குரல் இருக்கவேண்டும் என்றும் விரும்பினார் நேரு.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்தது. மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளுக்கு அமெரிக்காவும், கிழக்கத்திய கம்யூனிச நாடுகளுக்கு ரஷ்யாவும் தலைமை தாங்கின. வல்லரசுகளின் ராணுவக் கூட்டணியில் சேருமாறு புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் அழைக்கப்பட்டன. இந்தியா இனிமேல் தான் வளர்ச்சியடைய வேண்டும் என்றும், உலகத்தில் அமைதி நிலவவேண்டும் என்று கருதிய நேரு அணிசேராக் கொள்கையைப் பின்பற்றினார். 1961-ல் 25 உறுப்பினர்களைக் கொண்டு நேரு,

நாசர், டிட்டோ சுகர்னோ ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட அணிசேரா இயக்கம் இன்று 113 உறுப்பு நாடுகளைக் கொண்டிருக்கிறது.

'பாசிசம், காலனி ஆதிக்கம், இனவெறி, ஆக்கிரமிப்பு ஆகியவற்றை நாங்கள் எதிர்க்கிறோம், உலகத்துக்கும் எங்களுக்கும் ஆபத்து ஏற்படுத்துகின்ற போக்கை எதிர்க்கிறோம்' என்றார் நேரு. இந்தியாவின் பொருளாதார நலன்களை வளர்ப்பதும் அவற்றைப் பாதுகாப்பதும் நேருவின் நோக்கமாக இருந்தது. எனவே தான் அவர் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றியதால் மேற்கு நாடுகளிலிருந்து மூலதனம் தொழில்நுட்பம், எந்திரங்கள், மற்றும் உணவுப் பொருட்கள் கிடைத்தது. இந்தியாவின் தொழிற்துறையை வளர்ப்பதற்கு சோவியத் யூனியன் உதவி செய்தது.

இந்திய ராணுவத்திற்குத் தேவையான ஆயுதங்கள், பீரங்கிகள் விமானங்கள் ஆகியவற்றை இரண்டு முகாம்களிலிருந்தும் இந்தியா வாங்கியது. எந்தவொரு நாட்டையும் இந்தியா சார்ந்திருக்கவில்லை. 1963-65ம் ஆண்டுகளில் இந்தியா சோவியத் யூனியனிடம் இருந்து அதிகமான ஆயுதங்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதே காலத்தில் இந்தியாவின் வேளாண்மையில் பசுமைப்புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. அது முற்றிலும் அமெரிக்கா உதவியுடன் நடைபெற்றது. இவ்வாறு நேரு பின்பற்றிய அணிசேராக்கொள்கையால் இந்தியா வளம் பெற்றது, வலிமை யடைந்தது.

### இந்தியாவும் காமன்வெல்த்தும்

இந்தியா காமன்வெல்த்தில் உறுப்பினராக இருந்தது. சுதந்திரமடைந்த பிறகு காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டும் என்று சில கட்சிகள் கோரின. இதனை நேரு நிராகரித்தார். இனிமேல் இங்கிலாந்து சுதந்திர இந்தியா மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. இந்தியா உலக அரங்கில் இப்போது தான் நுழைந்திருக்கிறது. நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதை இந்தியா தெரிந்து கொள்வதற்கு சில ஆண்டுகள் ஆகும். இத்தகைய சூழ்நிலையில் காமன்வெல்த்தில் இருப்பது இந்தியாவுக்கு பாது காப்பளிக்கிறது என்று விளக்கம் அளித்தார் நேரு.

## நேருவின் காலத்தில் உலக அரங்கில் இந்தியா

### 1. கொரியா

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த போது கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வடகொரியாவில் கம்யூனிஸ்டுகள் ஆட்சி செய்தார்கள். தென்கொரியாவில் மேற்கு நாடுகளின் ஆதிக்கம் இருந்தது. 1950ல் வடகொரியா தென் கொரியா மீது படையெடுத்தது. ஜெனரல் மெக் ஆர்தர் தலைமையில் ஐ.நா. படைகள் வடகொரிய வீரர்களை விரட்டியதுடன்

கொரியாவை சீனாவிலிருந்து பிரிக்கின்ற யாலு நதி வரை முன்னேறியது. ஆனால் இதற்கு ஐநா அனுமதி இல்லை.

எனவே சீனப்பிரதமர் சூயென்லாய் சீனா நேரடியாகத் தலையிட நேரிடும் என்று இந்தியத்தூதர் சர்தார் பணிக்கர் மூலம் தெரிவித்தார். ஆனால் அமெரிக்கா அதை அலட்சியம் செய்தது. சீனா அனுப்பிய ஆயுதமேந்திய தொண்டர்கள் ஐ.நா. படையை (அந்தப் படையில் முழுவதும் அமெரிக்க வீரர்கள் மட்டுமே இருந்தனர்) 38-வது அட்சரேகை கோட்டுக்கு பின்னால் விரட்டியடித்தனர்.

அதே சமயம் சீனா தென்கொரியாவை ஆக்கிரமித்துவிட்டது என்று அமெரிக்கா ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்தது. இதை இந்தியா ஆதரிக்கவில்லை. இந்தியாவின் தீவிர முயற்சியால் போர் நிறுத்தம் ஏற்பட்டது. போர்க் கைதிகளின் பரிமாற்றத்திற்கு ஒரு நடுநிலைக் கமிஷன் இந்தியாவைச் சேர்ந்த ஜெனரல் திம்மையாவின் தலைமையில் அமைக்கப் பட்டது. போர்க்கைதிகளை அவரவர் நாடுகளுக்கு பிரச்சனை இல்லாமல் இந்திய படைவீரர்கள் அனுப்பி வைத்தார்கள். இந்தியாவின் சமாதான முயற்சிகளை உலக தலைவர்கள் பாராட்டினர்.

## 2. இந்தோ சீனா

இந்தோ சீனாவில் பிரெஞ்சு காலனிய படைகளுக்கும் வியட்நாம் புரட்சிக் காரர்களுக்கும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.பிரெஞ்சுப் படைகள் தொடர்ச்சியாக தோல்வியடைந்தபொழுது அமெரிக்கா ஆயுதங்களையும் படைவீரர்களையும் அனுப்பியது. இந்தோ சீனாவைப் பற்றி முடிவு செய்தவற்கு நடைபெற்ற ஜெனிவா மாநாட்டில் இந்தியா சார்பில் கிருஷ்ண மேனன் கலந்து கொண்டார். அவருடைய ஆறு அம்சத்திட்டமும், டில்லியில் சூயென்லாயுடன் நேரு நடத்திய பேச்சுவார்த்தைகளும் இந்தோசீனா போரை முடிவுக்கு கொண்டுவர உதவி செய்தன.

## 3. சூயஸ்கால்வாய் பிரச்சனை

1956-ல் எகிப்து சூயெஸ் கால்வாயை தேசியமயமாக்கியது. இதனால் சூயஸ் கால்வாயைப் பயன்படுத்திய உலக நாடுகள் அதிர்ச்சியடைந்தன. சூயஸ் கால்வாயை சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கவேண்டும் என்று இங்கிலாந்தும், பிரான்சும் கோரிக்கை விடுத்தன. இந்தியாவின் ஏற்றுமதியும் இறக்குமதியும் சூயஸ்கால்வாய் மூலமாகத் தான் நடைபெற்றது. ஆனால் சூயஸ் எகிப்தின் ஒருங்கிணைந்த பகுதி என்று 1888-ம் வருட கான்ஸ்டாண்டி நோபிள் கன்வன்ஷனை சுட்டிக்காட்டி இந்தியா அங்கீகரித்தது.

ஆனால் இங்கிலாந்தும், பிரான்சும் எகிப்தின் மீது படையெடுக்க இஸ்ரேலைத் தூண்டியதுடன் தங்களுடைய படைவீரர்களையும் சூயெஸ் பகுதிக்கு அனுப்பின. 'இது ஆக்கிரமிப்பு என்று நேரு கண்டனம் செய்தார். அமெரிக்காவும் ஐ.நா. சபையும் கண்டித்தன. பேச்சுவார்த்தைகளில் இந்தியா

எகிப்தின் நிலையை ஆதரித்தாலும் சூயஸ்கால்வாயைப் பயன்படுத்தும் நாடுகளின் நலன்கள் பாதிக்கப்படக் கூடாது என்று இந்தியா வலியுறுத்தியது.

### 4. ஹங்கேரி

கம்யூனிச முகாமிலிருந்த ஹங்கேரியில் கலகம் ஏற்பட்ட போது அதை ஒடுக்குவதற்கு சோவியத் ராணுவம் உள்ளே நுழைந்தது. ஐ.நா.சபை அதைக் கண்டித்ததுடன் சோவியத் ராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் என்று கோரியது. ஆனால் இந்தியா அதை ஆதரித்து வாக்களிக்கவில்லை.

ஐரோப்பாவில் சோவியத் யூனியனுக்கும், மேற்கத்திய நாடுகளுக்கும் செல்வாக்கு மண்டலங்கள் உள்ளன. ஹங்கேரியை மேற்கு நாடுகள் இழுப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது. சோவியத் யூனியனைக் கண்டிப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது. அதனுடன் சமரசம் செய்து கொள்வதே நல்லது என்று கூறினார் நேரு.

### 5. காங்கோ பிரச்சனை

1960-ல் காங்கோ பெல்ஜியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றது. பெல்ஜியத்தின் தூண்டுதலின் பேரில் தாமிர உலோக வளம் நிறைந்த கடங்கா மாகாணத்தை சுதந்திர நாடாக அறிவித்தார் ஷோம்பே. காங்கோ பிரதமர் லுமும்பா ஐநாசபை, அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனின் உதவியை நாடினார். அந்நிய நாடுகள் சோவியத் யூனியனின் உதவியை நாடினார். அந்நிய நாடுகள் ஆயுதங்கள் வழங்கின. சோவியத் யூனியன் லுமும்பாவை ஆதரித்து பெல்ஜியம் ராணுவ தளபதி மொபுவை ஆதரித்தது.

ஆனால் லுமும்பா படுகொலை செய்யப்பட்டார். காங்கோவிலிருந்து கூலிப்படைகள் வெளியேற வேண்டும். காங்கோ பாராளுமன்றத்தைக் கூட்டி புதிய அரசை அமைக்கவேண்டும் என்று நேரு வற்புறுத்தினார். அதற்குத் தேவையான படைவீரர்களை இந்தியா அனுப்பத் தயாராக உள்ளது என்றார் நேரு. இந்திய ராணுவம் காங்கோவுக்குச் சென்று உள்நாட்டுப் போரை நிறுத்தியது. பிரிந்து சென்ற கடங்கா மாகாணம் மத்திய அரசாங்கத்துடன் இணைந்தது. ஐ.நா.சபை பொதுச்செயலர் டாக்ஹாமர்ஷீல்ட் நேருவை பாராட்டி இந்தியா நம்மைக் காப்பாற்றியது என்று பெருமைப்பட்டார்.

## வல்லரசு நாடுகளுடன் உறவு

### 1. அமெரிக்கா

உலகத்தில் வலிமையான நாடான அமெரிக்காவுடன் இந்தியா நட்புறவை விரும்பியது. நாட்டை வலுப்படுத்துவதற்காக 1949-ல் விஜயலட்சுமி பண்டிட் அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு அக்டோபர் மாதம் நேரு அமெரிக்கா சென்றார். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா உதவும் என்று எதிர்பார்த்தார். ஆனால் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளால் இந்திய அமெரிக்க உறவில் விரிசல் ஏற்பட்டது.

பாகிஸ்தான் காஷ்மீரை ஆக்கிரமித்ததாக இந்தியா பாதுகாப்பு கவுன்சிலில் குற்றம் சாட்டியது. ஆனால் அமெரிக்கா பாகிஸ்தான் ஆதரவு நிலையையே கடைப்பிடித்தது. 1950ல் இந்தியா மக்கள் சீன அரசை அங்கீகரித்ததும், ஐ.நா. சபையில் மக்கள் சீனாவுக்கு இடமளிக்க வேண்டும் என்று இந்தியா கோரியதும் அமெரிக்காவுக்கு பிடிக்கவில்லை. 1953-ல் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அதிநவீன ஆயுதங்களை வழங்கியதை இந்தியா வன்மையாக எதிர்த்தது. அமெரிக்கா தலைமை தாங்கிய ராணுவக் கூட்டணியில் பாகிஸ்தானும் சேர்த்துக் கொள்ளப்பட்டதை இந்தியா விரும்பவில்லை.

இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டதற்கு பல காரணங்கள் உள்ளன. அப்போது உலகில் பனிப்போர் நடைபெற்று வந்தது. அமெரிக்கா கம்யூனிச எதிர்ப்பை தீவிரமாக கடைப்பிடித்தது. ஆனால் நேரு கம்யூனிசத்தை எதிர்க்கவில்லை. ஏனெனில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை அவர் எதிர்த்தபோது கம்யூனிஸ்டுகள் அவருக்கு உதவியாக இருந்தார்கள். கம்யூனிசம் தீமையான தத்துவம், கம்யூனிஸ்டுகளை ஒழிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் ஆணையை நேரு ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியா பின்பற்றிய அணிசேரக் கொள்கை அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டியது. தென் ஆப்பிரிக்காவிலும், ரொடீசியாவிலும் காலனி ஆதிக்கத்தை அமெரிக்கா ஆதரித்த போது இந்தியா அதனை எதிர்த்தது.

இப்படி நேருவின் காலத்தில் இந்தியா அமெரிக்கா நல்லுறவில் மேடு பள்ளங்கள் காணப்பட்டாலும் அமெரிக்காவின் அரசியல் தலைவர்கள். எல்லோரும் இந்தியாவை எதிர்க்கவில்லை. அமெரிக்க தூதர் செஸ்டர் பௌல்ஸ், ஜான்ஷெர்ஷன் கூப்பர், செனட்டர் புல்பிரைட் ஆகிய அமெரிக்க அரசியல் தலைவர்கள் இந்தியக் கொள்கைகளை ஆதரித்தார்கள். நேருவின் அமெரிக்க விஜயத்திற்குப் பிறகு இந்தியாவுக்கு சில உதவிகள் கிடைத்தன. செஸ்டர் பௌல்ஸ் முயற்சியில் 1953-ல் இந்திய உதவிக் கழகம் (Aid India Club) அமைக்கப்பட்டது. 1960-மே மாதம் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே P.L. 480 என்ற உடன்படிக்கை செய்யப்பட்டது. இதன்படி இந்தியாவுக்கு அமெரிக்கா உணவு பொருட்களை அனுப்பியது. 1963- டிசம்பர் 7ல் இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி தாராப்பூரில் அமெரிக்க உதவியுடன் அணுசக்தி நிலையம் அமைக்கப்பட்டது. 1963-ல் கென்னடி அமெரிக்க குடியரசுத்தலைவராக பதவியேற்றப் பிறகு இந்திய அமெரிக்க உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## 2. சோவியத் யூனியன்

நேருவின் காலத்தில் இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான நல்லுறவுக்கு வித்திடப்பட்டது. இயற்கையாகவே நேரு கம்யூனிசக் கருத்துக்களால் கவரப்பட்டார். 1917-ம் வருட ரஷ்ய புரட்சியால்

ஈர்க்கப்பட்டார். சோவியத் யூனியனில் காணப்பட்ட திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வியந்தார். அதன் சாதனைகளைப் பாராட்டினார். 1947ல் மே மாதமே தனது சகோதரி விஜய லட்சுமி பண்டிட்டை சோவியத் யூனியனின் முதல் இந்தியத் தூதுவராக நியமித்தார்.

ஆனால் ஆரம்பத்தில் இந்தியாவின் அணுகுமுறைகள் சோவியத் யூனியனுக்கு புரியாத புதிராக இருந்தது. காரணம், இந்தியா ஆங்கில அமெரிக்கர்களுடைய செல்வாக்கில் உள்ள நாடு என்று சோவியத் யூனியன் கருதியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1948-ல் தெலுங்கானாவில் நடத்திய ஆயுதப் போராட்டத்தை அரசு நசுக்கியது, இந்தியா விடுதலையடைந்த பிறகும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் நீடித்தது ஆகிய காரணங்களால் இந்தியாவுடன் நெருக்கமான உறவு ஏற்படவில்லை. இந்த நிலை ஸ்டாலின் ஆட்சிக்காலம் வரை நீடித்தது.

1953-ல் ஸ்டாலின் மரணமடைந்த பிறகு சோவியத் யூனியன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இந்தியா ஏகாதிபத்திய நாடுகளுடன் சேராமல் பல சர்வதேச பிரச்சனைகளில் சுதந்திரமான அணுகு முறையைப் பின்பற்றியதை சோவியத் யூனியன் கவனித்தது. 1955-ல் நேரு சோவியத் யூனியனில் சுற்றுப்பயணம் செய்தார். அதே ஆண்டில் குருஷேவ், புல்கானின் ஆகியோர் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார்கள். நல்லுறவு ஆரம்பித்தது.

1962-ஜூன் மாதம் ஐ.நா. சபையில் காஷ்மீர் பிரச்சனை தொடர்பாக இந்தியாவுக்கு எதிரான தீர்மானத்தை பாகிஸ்தான் கொண்டுவந்தபோது, சோவியத் யூனியன் இந்தியாவுக்கு ஆதரவாக தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தை ரத்து செய்தது. காஷ்மீர் பிரச்சனையில் இந்தியாவை உறுதியாக ஆதரித்தது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும் சோவியத் யூனியன் சிறப்பான உதவிகளைச் செய்தது. பிலாய் உருக்காலை, பொகாரோ உருக்காலை சோவியத் யூனியனின் உதவியுடன் நிறுவப்பட்டன.

1959-ல் தலாய்லாமா இந்தியாவில் தஞ்சமடைந்தார். இது இந்திய சீன நட்புறவைப் பாதித்தது. அப்போதும் சோவியத் யூனியன் சீனாவை ஆதரிக்காமல் நடுநிலை வகித்தது. 1960-ல் சோவியத் யூனியன் இந்தியாவுக்கு விமானங்கள், ஹெலிகாப்டர்கள், சீனா உரிமை கோரிய மலைப்பகுதிகளில் சாலை அமைப்பதற்கு பொறியியல் இயந்திரங்களை கொடுத்தது. 1962-ல் மிக் விமானத்தின் பாகங்களை இந்தியாவில் தயாரிப்பதற்கு சோவியத் யூனியனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

1962 அக்டோபர் 20-ல் சீனா இந்தியாவைத் தாக்கிய போது சோவியத் யூனியன் நடுநிலை வகித்தது. 1962- டிசம்பரில் சீனா தான் இந்தியாவின் மீது போரைத் தொடங்கியது என்று சுஸ்லோவ் என்று கம்யூனிசக் கட்சிப் பிரமுகர்

சுப்ரீம் சோவியத்தில் கூறினார். புதிதாகச் சுதந்திரம் அடைந்த ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் சோவியத் யூனியன் நட்புறவுகளை ஏற்படுத்துவதற்கு இந்தியா உதவி செய்தது. சோவியத் யூனியனைச் சுற்றிலும் அமெரிக்காவுடன் ராணுவக் கூட்டணி வைத்திருந்த நாடுகள் இருந்தன. எனவே சோவியத் யூனியன் இந்தியாவுடன் நேரு காலத்தில் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. சமத்துவ அடிப்படையில் நெருங்கிய நட்புறவு வளர்ந்தது.

## அண்டை நாடுகளுடன் உறவு :

### 1. நேபாளம்

நேரு இந்தியாவைச் சுற்றியிருந்த எல்லா நாடுகளுடனும் நட்புறவை வளர்த்துக் கொண்டார். இந்தியாவின் இமயமலை எல்லையில் உள்ள நேபாளத்துடன், இந்தியா விடுதலையடைந்தவுடன் நிலை ஒப்பந்தம் (Standstill Agreement) ஒன்று செய்து கொள்ளப்பட்டது. பின்னர் 1950 ஜூலை மாதம் இருநாடுகளுக்கும் இடையே அமைதி மற்றும் நட்புறவு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. 1954-ம் வருட கொழும்பு திட்டத்தின்படி நேபாளத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், கட்டமைப்புக்கும் இந்தியா பொருளாதார உதவி செய்தது. நேபாளம் சீனாவின் ஆதிக்கத்திற்குள் சிக்கிவிடாமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார் நேரு. 1963 மார்ச் மாதம் அப்போது இந்திய உள்துறை அமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி நேபாளத்திற்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டார்.

### 2. பர்மா

நேருவின் காலத்தில் ஆரம்பத்தில் இந்தியாவும் பர்மாவும் நட்புறவு நாடுகளாக இருந்தன. பர்மிய மக்கள் அங்சான் (Aung San) என்பவர் தலைமையில் சுதந்திரத்திற்காகப் போராடினர். 1948 ஜனவரி 4-ல் பர்மா சுதந்திரம் அடைந்தது. அதிபர் அங்சான் நேருவின் நண்பராக இருந்தார். இந்தியா நேபாளத்திற்கு பொருளாதார உதவி அளித்தது. ஆனால் தளபதி நெவின் என்பவர் நேபாள அதிபர் ஆனவுடன் உறவு சீர்கெட ஆரம்பித்தது. நெவின் 1960 ஜனவரியில் சீனாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். எனவே 1962-ல் சீன ஆக்கிரமிப்பு போரின் போது பர்மா நடுநிலை வகித்தது. 1963-ல் பர்மா அரசு அங்கிருந்த இந்தியர்களின் நிலங்களையும், தொழிற்சாலைகளையும் தேசியமயமாக்கிவிட்டது. பல இந்தியக் குடும்பங்கள் பர்மா அகதிகளாக இந்தியா வந்தனர். அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. நேருவின் காலத்தில் நீண்ட காலமாக வரையறுக்கப்படாமல் இருந்த இந்திய - பர்மா எல்லை ஒரு உடன்படிக்கை மூலம் வரையறுக்கப்பட்டது.

### 3. இலங்கை :

இந்திய இலங்கை உறவுகள் வரலாற்றிலும் புராணங்களிலும் மிக

ஆழமாகப் பொதிந்துள்ளது. இருநாடுகளுக்கிடையிலான வரலாற்று உறவுகள் அசோகர் காலத்திலிருந்தே காணப்படுகிறது. சங்க காலத்திலும், பிற்கால சோழர் காலத்திலும் அரசியல், சமூக, கலாச்சார பரிவர்த்தனை மூலமாகவும் மிகவும் நெருக்கமான உறவு ஏற்பட்டது.

1948-ல் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலையடைந்தது. சுதந்திரமடைந்த பின் இலங்கை இந்தியா மீது ஒருவித பயஉணர்வு கொண்டு பாதுகாப்பு தேடியது. காமன்வெல்த் அமைப்பில் உறுப்பினராகியது. அணி சேராக் கொள்கையைப் பின்பற்றியது. நேரு இலங்கையுடன் நட்புறவு கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1949-ல் இந்தியாவும் இலங்கையும் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்திய இலங்கை உறவில் மிக முக்கியமான பிரச்சனை இந்திய வம்சாவழிகள் இலங்கையில் குடியேறியதுதான். இந்திய இலங்கை துவக்க கால உறவில் இந்தியத் தமிழர் நிலை குறித்து இந்தியா கவலை கொண்டது. 1954 ஜனவரி மாதம் இலங்கை பிரதமர் கோட்டி வாலாவும், நேருவும் புதுடில்லியில் நேரு - கோட்டிவாலா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன் மூலம் இலங்கையில் வாழ்ந்த நாடற்ற இந்திய வம்சாவழிகளின் எதிர்காலம் பற்றி முடிவெடுக்கப்பட்டது. அதன்படி இலங்கையில் வாழ்ந்த 9,75,000 இந்திய வம்சாவளிகளில் 5,25,000 பேரை திரும்ப அழைத்துக் கொள்ள இந்தியா சம்மதித்தது. இலங்கை அரசு 3,00,000 இந்திய வம்சாவழியினருக்கு குடியுரிமை வழங்க ஒப்புக்கொண்டது. இந்த உடன்படிக்கை இலங்கை இந்திய நட்புறவை வலுப்படுத்தியது.

1956-ல் பதவியேற்ற பிரதமர் பண்டார நாயகே இந்தியாவுடன் நட்புறவை மேலும் வலுப்படுத்தினார். சர்வதேச பிரச்சனைகளில் நேருவுக்கு பக்க பலமாக இருந்தார். ஆனால் 1960 சிரிமாவோ பண்டார நாயகே பிரதமரான பிறகு இந்திய இலங்கை உறவு சீர்கெட ஆரம்பித்தது. ஆனாலும் பொதுவாக நேருவின் காலத்தில் இந்திய இலங்கை உறவு சீரானதாகவே காணப்பட்டது.

## 4. பாகிஸ்தான்

இந்தியாவைப் பிரிவினை செய்வதை காங்கிரஸ் தலைவர்கள் விரும்பா விட்டாலும் ஒத்துக் கொண்டார்கள். பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானை மீண்டும் இந்தியா இணைத்துக் கொண்டு விடுமோ என்று பாகிஸ்தானியர் பயந்தார்கள். பிரிவினைக்குப் பிறகு மதக்கலவரங்கள் நடைபெற்றன. இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினர் பாகிஸ்தானில் தங்கள் உடமையை விட்டு விட்டு அகதிகளாக இந்தியா வந்தனர். மக்கள் பரிமாற்றப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக 1950-ல் நேருவும் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானும் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டனர். ஆனால் நேரு லியாகத் உடன்படிக்கையை இருநாடுகளும் சரியாகப் பின்பற்றாத காரணத்தால்

அகதிகள் பிரச்சனை, சிறுபான்மையோர் பிரச்சனை ஆகியவை முழுவதுமாக தீர்க்கப்படவில்லை.

1954-ல் இந்தியா குடிபெயர்ந்தோர் சட்டம் (Displaced Persons Act) இயற்றி இந்தியாவுக்கு வந்த அகதிகளுக்கு பாதுகாப்பு அளித்தது. 1955ல் இந்தியாவும் பாகிஸ்தானும் செய்து கொண்ட கராச்சி ஒப்பந்தத்தின்படி அகதிகளின் அசையாச் சொத்துகள் பற்றிய பிரச்சனை தீர்க்கப்பட்டது. இரு நாடுகளுக் கிடையே சொத்துக்களைப் பிரிப்பதில் ஏற்பட்ட பிரச்சனையை தீர்ப்பதிலும் நேரு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்.

நதிநீர் பங்கீட்டு பிரச்சனையையும் நேரு சுமூகமாகத் தீர்த்துக் கொண்டார். 1960-செப்.11ல் நேருவும் அயுப்கானும் சிந்து நதிநீர் உடன்படிக்கை (Indus Water Treaty) செய்து கொண்டு நதிநீர்ப் பங்கீட்டு பிரச்சனையைத் தீர்த்துக் கொண்டனர்.

1947-அக்டோபரில் பாகிஸ்தான் காஷ்மீர் மீது படையெடுத்தது. காஷ்மீர் அரசர், காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தார். பாகிஸ்தானின் காஷ்மீர் ஆக்கிரமிப்பு பற்றி ஐ.நா. சபையில் இந்தியா முறையிட்டது. இங்கிலாந்தும் அமெரிக்காவும் பாகிஸ்தானை ஆதரித்தன. காஷ்மீரில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்த பிறகு பொது மக்களிடம் வாக்கெடுப்பு என்று ஐ.நா. சபை தீர்மானித்தது. பாகிஸ்தான் ராணுவம் காஷ்மீரிலிருந்து வெளியேறவில்லை. அதே போல வாக்கெடுப்பும் நடைபெறவில்லை. காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை கூடி இந்தியாவுடனான இணைப்பை ஆதரித்தது. இந்தியாவுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக ஐ.நா. சபையில் காஷ்மீர் பிரச்சனையை பாகிஸ்தான் அவ்வப்போது எழுப்பி வருகிறது.

### 5. சீனா

ஏகாதிபத்திய அரசுகளை எதிர்த்து சீனா போராடிய போது இந்தியா தனது ஆதரவைத் தெரிவித்தது. ஜப்பான் சீனாவை ஆக்கிரமித்த போது இந்தியா கண்டனம் செய்தது. 1950 ஜனவரியில் மக்கள் சீனக் குடியரசு அமைக்கப்பட்ட போது இந்தியா முதல் நாடாக அதை அங்கீகரித்தது. ஐ.நா. சபையில் மக்கள் சீனாவுக்கு இடமளிக்க வேண்டும் என்று இந்தியா வாதிட்டது. சீனா திபெத்தை ஆக்கிரமித்த போது இந்தியா வேதனைப்பட்டது. ஆனால் திபெத்தின் மீது சீனாவுக்கு உள்ள உரிமையை அங்கீகரித்தது. நேரு புதிய சீனாவையும் அதன் பிரதமரையும் உலகத்துக்கு அறிமுகப்படுத்தினார். இந்திய சீன உறவின் உச்ச கட்டமாக 1954-ல் இந்திய சீன நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் காணப்பட்ட பஞ்சசீலக் கொள்கை ஒரு புதுசகாப்தத்தை உருவாக்கியது.

1954 ஜூன் மாதம் சூயென்லாய் இந்தியாவுக்கு வந்த போது சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. 'இந்தியாவும் சீனாவும் பாய் பாய்' (சகோதரர்கள்) என்ற கோஷங்கள் மக்களிடையே பிரபலமானது. 1955-ல்

நடைபெற்ற பாண்டுங் மாநாட்டில் நேருவும், சூயென்லாயும் கலந்து கொண்டார்கள். 1956 நவம்பரில் சூயென்லாய் இரண்டாவது முறையாக இந்தியாவுக்கு விஜயம் செய்தார். மேலும் 1955ஏப்ரல் 1ல் கையெழுத்திட்ட லாசா ஒப்பந்தத்தின்படி இந்தியா தைவான் பிரச்சனையில் சீனாவுக்கு முழு ஆதரவளித்தது.

1956-ம் ஆண்டுக்குப் பிறகு இந்திய சீன உறவில் விரிசல் ஏற்பட்டது. 1959ல் திபெத்தின் மதத்தலைவரான தலாய் லாமா ஆயிரக்கணக்கான அகதிகளுடன் இந்தியாவில் தஞ்சமடைந்தார். அவர் இந்தியாவில் சீன எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று நேரு அறிவித்தார். 1959, அக்டோபரில் சீனப்படைகள் லடாக்கில் இந்தியாவின் எல்லைக் காவல்படைகள் மீது சுட்டன. இந்தியா தனது எதிர்ப்பை சீனாவுக்கு தெரியப்படுத்தியது. எதிர்பாராத அளவில் 1962 அக்டோபர் 20-ல் சீனா இந்தியாவின் மீது மிகப்பெரிய தாக்குதலைக் தொடுத்தது. நேரு அதிர்ச்சியடைந்தார். அமெரிக்க குடியரசுத்தலைவர் கென்னடியிடம் ராணுவ உதவி கேட்டார் இங்கிலாந்திடம் உதவி கோரினார். போரில் சீனா 15,200 சதுர மைல் அளவுள்ள இந்தியப் பகுதிகளைக் கைப்பற்றியது.

இந்த சீனப்படையெடுப்பால் நேரு அதிர்ச்சியடைந்தார். அவரது அரசியல் எதிரிகள் அவரை தீவிரமாகத் தாக்கினார்கள். சீனப்போரில் இந்தியப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்வியின் காரணமாக நேரு தன் வாழ்நாளில் முதல் தடவையாக 1963-ஆகஸ்டில் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை சந்திக்க நேர்ந்தது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்று நேரு பதவியில் நீடித்த போதிலும் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 1964-மே 27ல் நேரு மறைந்தார்.

நேரு சீனாவுடன் நட்பாக இருப்பதற்குப் பாடுபட்டார். அது சரியான கொள்கை. பாகிஸ்தான் இந்தியாவின் எதிரிநாடாக உள்ளது. சீனாவும் எதிரி நாடாகி விடக்கூடாது என்று விரும்பினார். பாதுகாப்பு என்பது ஆயுதங்களைச் சேகரிப்பதில்லை. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியே நாட்டைப் பாதுகாக்கும் என்று நேரு கூறினார். ஏழை நாட்டின் வளங்களைக் கொண்டு ராணுவத்தை வளர்க்கக்கூடாது, பொருளாதார முன்னேற்றத்தை அடைய வேண்டும் . என்றார். பிற்காலத்தில் வந்த பிரதமர்கள், ராணுவத்துறையில் வெற்றி பெறுவதற்கு நேரு வகுத்துக் கொடுத்த வெளியுறவுக் கொள்கையே முக்கியக் காரணம் ஆகும்.

இவ்வாறு நேருவின் காலத்தில் நாட்டின் வளர்ச்சி, பாதுகாப்பு என்பதின் அடிப்படையிலேயே இந்தியா தனது வெளிஉறவுக் கொள்கையை வகுத்துக் கொண்டது.

## 1.9 காஷ்மீர்ப் பிரச்னை (Kashmir Problem)

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் (Hari Shign) இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் சேர்வதா அல்லது தனித்திருப்பதா என்பதை முடிவெடுக்க முடியாமல் குழம்பினார். அக்குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பத்தான் மலைவாழ் மக்கள் காஷ்மீருக்குள் நுழைந்து, நில ஆக்கிரமிப்பு செய்தனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ஹரி சிங் 1947 அக்டோபர் 26-ஆம் தேதி இந்தியாவின் உதவியைப் பெறும் பொருட்டு இந்தியாவுடன் இணைய சம்மதித்தார். ஆனால் பாகிஸ்தான் காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதை ஏற்றுக் கொள்ளவில்லை. காஷ்மீர்ப் பிரச்னை பிறந்தது.

இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக இருந்த மௌண்ட்பேட்டன் பிரபு காஷ்மீர்ப் பிரச்னைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண முயன்றார். பிரதமர் நேரு சில நிபந்தனைகளுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சம்மதித்தார்: 1) காஷ்மீர் இந்தியப் பகுதி என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்; 2) பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும்; 3) பாகிஸ்தான் காஷ்மீரிலிருந்து வெளியேறிய பின் காஷ்மீரிலிருந்து இந்தியப் படையை விலக்கிக் கொள்ளும்; 4) மக்களாட்சி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் ஐ.நா. வின் மேற்பார்வையில் காஷ்மீர் மக்களிடையே கருத்துக் கணிப்பு (Plebiscite) நடத்தப்படும்.

பிரதமர் நேரு காஷ்மீர்ப் பிரச்னை பற்றிப் பாகிஸ்தான் அதிபர் ஜின்னாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பயனில்லை. எனவே, 1947 டிசம்பர் 31-ஆம் தேதி இந்தியா காஷ்மீர்ப் பிரச்னையை ஐ.நா.வின் பாதுகாப்பு அவைக்குக் கொண்டு சென்றது. பாதுகாப்பு அவை ஐவர் கொண்ட இந்திய-பாகிஸ்தான் ஐ.நா. கமிஷனை (U.N. Commission for India and Pakistan) நியமித்தது. அக்கமிஷன் காஷ்மீரில் 1949 ஜனவரி முதல் தேதியிலிருந்து போர் நிறுத்தம் செய்வதில் வெற்றி பெற்றது. அதன்பின் பாதுகாப்பு அவை காஷ்மீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. பாகிஸ்தானின் 'இராணுவத் தீர்வால்' தோற்றுவிக்கப்பட்ட 'காஷ்மீர்ப் பிரச்னை' இந்தியாவின் 'அரசியல் தீர்வால்' முடிவுக்கு வரவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை இப்பிரச்னை தொடர்கதையாகவே உள்ளது.

## 1.10 இந்திய – சீனப் போர், 1962
### Indo - China War

இந்தியாவும் சீனாவும் இமயமலைத் தொடர் இரட்டையர்கள். இரண்டு நாடுகளும் தொன்மைக் கலாச்சார தொடர்புகள் கொண்டவை. இரு நாடுகளுமே அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையானவை. இந்தியா 1947ல் சுதந்திர ஜனநாயகக் குடியரசாயிற்று. சீனா 1949ல் கம்யூனிச மக்கள் குடியரசு நாடானது. விடுதலை பெற்ற பின்னர் இரு நாடுகளும் நட்பு நாடுகளாகவே இருந்தன. கம்யூனிஸ்ட் சீனாவுக்கு ஜனநாயக இந்தியா முழு அங்கீகாரம் அளித்தது (1949, டிசம்பர்). சீனா ஐ.நாவில் இடம் பெற இந்தியா முழு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்தது. இந்தியாவும் சீனாவும் ஒருங்கிணைந்து 'பஞ்சசீலக் கொள்கை'யை உருவாக்கின (1954, ஏப்ரல் 29). இரண்டாண்டுகள் (1954–56) இருநாடுகளின் 'தேனிலவுக் கால'மாகக் கருதப்பட்டது. அதன்பின் இருநாடுகளுக்கிடையேயான இடைவெளி அதிகரித்து சீனா – இந்தியா எல்லைப் போரில் முடிந்தது (1962). இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற இப்போர் விசித்திரமானது; தனித்தன்மையுடையது.

**போருக்கான காரணங்கள்**

இந்தியா – சீனா எல்லைப் போர் பல காரணங்களின் கூட்டு விளைவாகும். இக்காரணங்கள் இலைமறை காயாக நீருபூத்த நெருப்பாக இருந்து பின்னர் காட்டுத்தீ போன்று வெளிப்பட்டது. ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய இக்காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

**எல்லைத் தகராறு**

1950–ம் ஆண்டு சீனா திபெத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அதன் விளைவாக இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையேயான எல்லை 2600 மைல்களாக விரிவடைந்தது. இந்த எல்லைப் பகுதியை மூன்றாகப் பிரிக்கலாம்: 1) **கிழக்குப் பகுதி** (Eastern Sector). இதில் திபெத்தும் இந்தியப் பாதுகாப்புப் பகுதிகளான (Indian Protectorates) சிக்கிமும் பூடானும் அடங்கும். பூட்டானுக்குக் கிழக்கே உள்ள எல்லைப் பகுதியை **மக்மகான் எல்லைக்கோடு** (McMahon Line) தீர்மானித்தது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1914–ம் ஆண்டு ஒருதலைப்பட்சமாக செய்யப்பட்ட இந்த எல்லைக்கோட்டை சீனா ஏற்க மறுத்தது. இதுவே போருக்கான அடிப்படைக் காரணமாகும். 2) நேபாளத்துக்கு மேற்கே லடாக் வரையுள்ள நிலப்பகுதி **மையப் பகுதி** (Middle Sector) ஆகும். 3) திபெத் மற்றும் சிங்கியாங் உள்ளிட்ட லடாக் எல்லைப் பகுதி முழுவதும் **மேற்குப் பகுதி** (Western Sector)யாகும். இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து சுவீகரித்த இந்த எல்லையே இயல்பானது, இறுதியானது என்று எடுத்துக் கொண்டது. ஆனால் சீனா அவ்வாறு நினைக்கவில்லை.

**சிங்கியாங் – திபெத் நெடுஞ்சாலை**

இந்திய – சீனா எல்லைப் பகுதியில் இந்தியாவுக்குச் சொந்தமாகக் கருதப்பட்ட பெருநிலப்பரப்பு தரிசு நிலமாகும். குறிப்பாக 14,000 அடி உயரத்திலிருந்து மலைப்பகுதிகள் பயன்படாப் பகுதியாக இருந்தது. லடாக் பகுதியிலிருந்த **அக்சாய் சின்** (Aksai Chin) என்ற தரிசு நிலத்தில் சீனா சிங்கியாங் – திபெத் நெடுஞ்சாலை (Sinkiong - Tibet Highway)யைப் போட்டது. 1957ல் தான் இந்த விவகாரம் இந்தியாவின் கவனத்திற்கு வந்தது. சீனாவின் இச்செயல் இந்திய எல்லையைக் 'கைப்பற்றி' இந்தியாவின் அனுமதியின்றி பயன்படுத்திக் கொண்டதாகக் கருதப்பட்டது. சீனாவின் 'அபகரிப்பு' இந்திய மக்களிடையே அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

***சீன நிலப்படங்கள்***

சீனா அவ்வப்போது வெளியிட்ட நிலப்படங்கள் (Maps) இந்தியாவின் சந்தேகத்தை அதிகரித்தது. சீனப் பிரதமர் சூ என் லாய் (Chou-En-Lai) 1954 அக்டோபர் மாதம் இந்தியா வந்தபோது பிரதமர் நேரு இப்படங்கள் பற்றி விவாதித்தார். இப்படங்கள் திருத்தப்படும் என்று உறுதியளித்தார் சீனப் பிரதமர். இப்படங்கள் திருத்தப் படாமையால் 1958 டிசம்பர்

பின்னர் இரு நாடுகளும் நட்பு நாடுகளாகவே இருந்தன. கம்யூனிஸ்ட் சீனாவுக்கு ஜனநாயக இந்தியா முழு அங்கீகாரம் அளித்தது (1949, டிசம்பர்). சீனா ஐ.நாவில் இடம் பெற இந்தியா முழு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்தது. இந்தியாவும் சீனாவும் ஒருங்கிணைந்து 'பஞ்சசீலக் கொள்கை'யை உருவாக்கின (1954, ஏப்ரல் 29). இரண்டாண்டுகள் (1954–56) இருநாடுகளின் 'தேனிலவுக் கால'மாகக் கருதப்பட்டது. அதன்பின் இருநாடுகளுக்கிடையேயான இடைவெளி அதிகரித்து சீனா – இந்தியா எல்லைப் போரில் முடிந்தது (1962). இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற இப்போர் விசித்திரமானது; தனித்தன்மையுடையது.

### போருக்கான காரணங்கள்

இந்தியா – சீனா எல்லைப் போர் பல காரணங்களின் கூட்டு விளைவாகும். இக்காரணங்கள் இலைமறை காயாக நீருபூத்த நெருப்பாக இருந்து பின்னர் காட்டுத்தீ போன்று வெளிப்பட்டது. ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய இக்காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

### எல்லைத் தகராறு

1950–ம் ஆண்டு சீனா திபெத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அதன் விளைவாக இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையேயான எல்லை 2600 மைல்களாக விரிவடைந்தது. இந்த எல்லைப் பகுதியை மூன்றாகப் பிரிக்கலாம்: 1) **கிழக்குப் பகுதி** (Eastern Sector). இதில் திபெத்தும் இந்தியப் பாதுகாப்புப் பகுதிகளான (Indian Protectorates) சிக்கிமும் பூடானும் அடங்கும். பூட்டானுக்குக் கிழக்கே உள்ள எல்லைப் பகுதியை **மக்மகான் எல்லைக்கோடு** (McMahon Line) தீர்மானித்தது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1914–ம் ஆண்டு ஒருதலைப்பட்சமாக செய்யப்பட்ட இந்த எல்லைக்கோட்டை சீனா ஏற்க மறுத்தது. இதுவே போருக்கான அடிப்படைக் காரணமாகும். 2) நேபாளத்துக்கு மேற்கே லடாக் வரையுள்ள நிலப்பகுதி **மையப் பகுதி** (Middle Sector) ஆகும். 3) திபெத் மற்றும் சிங்கியாங் உள்ளிட்ட லடாக் எல்லைப் பகுதி முழுவதும் **மேற்குப் பகுதி** (Western Sector)யாகும். இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து சுவீகரித்த இந்த எல்லையே இயல்பானது, இறுதியானது என்று எடுத்துக் கொண்டது. ஆனால் சீனா அவ்வாறு நினைக்கவில்லை.

### சிங்கியாங் – திபெத் நெடுஞ்சாலை

இந்திய – சீனா எல்லைப் பகுதியில் இந்தியாவுக்குச் சொந்தமாகக் கருதப்பட்ட பெருநிலப்பரப்பு தரிசு நிலமாகும். குறிப்பாக 14,000 அடி உயரத்திலிருந்து மலைப்பகுதிகள் பயன்படாப் பகுதியாக இருந்தது. லடாக் பகுதியிலிருந்த **அக்சாய் சின்** (Aksai Chin) என்ற தரிசு நிலத்தில் சீனா சிங்கியாங் – திபெத் நெடுஞ்சாலை (Sinkiong - Tibet Highway)யைப் போட்டது. 1957ல் தான் இந்த விவகாரம் இந்தியாவின் கவனத்திற்கு வந்தது. சீனாவின் இச்செயல் இந்திய எல்லையைக் 'கைப்பற்றி' இந்தியாவின் அனுமதியின்றி பயன்படுத்திக் கொண்டதாகக் கருதப்பட்டது. சீனாவின் 'அபகரிப்பு' இந்திய மக்களிடையே அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

### சீன நிலப்படங்கள்

சீனா அவ்வப்போது வெளியிட்ட நிலப்படங்கள் (Maps) இந்தியாவின் சந்தேகத்தை அதிகரித்தது. சீனப் பிரதமர் சு என் லாய் (Chou-En-Lai) 1954 அக்டோபர் மாதம் இந்தியா வந்தபோது பிரதமர் நேரு இப்படங்கள் பற்றி விவாதித்தார். இப்படங்கள் திருத்தப்படும் என்று உறுதியளித்தார் சீனப் பிரதமர். இப்படங்கள் திருத்தப் படாமையால் 1958 டிசம்பர்

மாதம் நேரு சீனப் பிரதமருக்கு நினைவூட்டுக் கடிதம் எழுதினார். அதற்குப் பதில் கடிதம் எழுதிய சூஎன்லாய் (1959 ஜனவரி 9) சீன – இந்திய எல்லை முறையாக வரையறுக்கப்படவில்லை என்றும் இந்தியா மேற்குப் பகுதியில் உரிமை கொண்டாடுவது ஏற்புடையதில்லை என்றும் முதன்முறையாகத் தெளிவுபடுத்தினார். சீனாவின் நிலை இந்தியாவுக்கு ஏமாற்றமளித்தது.

**திபெத் கிளர்ச்சி**

திபெத் சுதந்திரமான பகுதியா அல்லது சீனாவுக்குச் சொந்தமானதா என்பது சர்ச்சைக்குரிய விவகாரமாக இருந்தது. திபெத் சுயேட்சையாகச் செயல்படுவதற்கு இந்தியா உத்திரவாதமளித்திருந்தது. ஆனால் சீனா திபெத் மீது உரிமை கொண்டாடி வந்தது. 1955ல் சீனா அப்பகுதியை இணைத்துக் கொண்டது! சீனப் பிரதமர் சூ என்லாய் இந்தியா வந்தபோது (1954) சீனா திபெத் சுயேட்சையாகச் செயல்படுவதில் தலையிடாது என்றும், அப்பகுதியில் கம்யூனிசத்தைத் திணிக்காது என்றும் உறுதி அளித்தார். இருப்பினும் திபெத் மக்கள் சீனாவின் மேலாதிக்கத்துக்கு எதிராகப் போராடி வந்தனர். 1959 மார்ச் மாதம் திபெத்தில் சீனாவுக்கு எதிராகக் கிளர்ச்சி வெடித்தது. இக்கிளர்ச்சியைத் திபெத்தியப் பழமைவாதிகளும், நிலச்சுவான்தார்களும், கிளர்ச்சிக்காரர்களும் இந்தியாவின் கலிம்பாங் (Kalimpong)கைக் களமாகக் கொண்டு சீனாவுக்கு எதிராக நடத்தியதாகச் சீனா குற்றம் சாட்டியது. இதை இந்தியா மறுத்தது. எனினும் இந்தியாவின் 'விரிவாக்கவாதி' (Expansionists)களின் தூண்டுதலால் தான் திபெத் கிளர்ச்சி ஏற்பட்டதாகச் சீனா கருதியது!

**தலைலாமா தஞ்சம்**

1959 மார்ச் மாதம் திபெத் கிளர்ச்சியின் போது புத்த மதத் தலைவர் தலைலாமா அவரது சீடர்களுடனும், ஆதரவாளர்களுடனும் தப்பி வந்து இந்தியாவில் அடைக்கலமடைந்தார். அடைக்கலம் கேட்டு வந்த தலைலாமாவும் அவருடன் வந்த 13,000 திபெத் அகதிகளும் முசூரியில் தங்கவைக்கப்பட்டனர். திபெத்திய அகதிகளுக்கு இந்தியாவில் அடைக்கலம் கொடுக்கப்பட்டது பகிரங்க சீன விரோதப் போக்காகக் கருதிய சீனா இந்தியாவுக்கு எதிராகத் திரும்பியது.

**சீனாவின் சந்தேகம்**

1959 ஜூலை 31-ம் தேதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கேரளா ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாத்தின் சீன ஆதரவு கம்யூனிஸ்ட் அரசாங்கம் கலைக்கப்பட்டதும், 1961 டிசம்பர் 17-18 தேதிகளில் இந்திய இராணுவத்தை அனுப்பி கோவாவை இணைத்துக் கொண்டதும் இந்தியா ஒரு இராணுவ வல்லரசாக உருவாகத் திட்டமிட்டுள்ளதோ என்ற சந்தேகம் சீனாவுக்கு ஏற்பட்டது. இந்தியா ஆப்பிரிக்க நாடுகளின் காலனி எதிர்ப்புக்குத் தலைமைதாங்கியதும் சீனாவின் சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக சீனா எண்ணியது.

**சீன – இந்தியப் போர்**

1959 ஆகஸ்டு 25ம் தேதி சீனப் படையினர் 'கிழக்குப் பகுதி'யில் லாங்ஜு (Longju)வில் இருந்த இந்தியப் படையினர் மீது முதன் முறையாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதுதான் இருநாட்டு எல்லைப் போருக்கான முதல் நடவடிக்கை. அதன்பின் 'மேற்குப் பகுதி'யில் சீனத் துருப்புகள் சுட்டதில் ஒன்பது இந்தியப் போலீசார் இறந்தனர் (அக்.21). 1959 நவம்பர் மாதத்துக்கும் 1962 செப்டம்பர் மாதத்துக்குமிடையே சீன இராணுவம் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இந்திய தளங்களைத் தாக்கியது. மலைமுகடுகளில் இந்திய இராணுவத்தினரால் சீனத்தாக்குதலை சமாளிக்க

முடியவில்லை. தன்னிச்சையாகப் போரைத் துவக்கிய சீனா 1962, 20-21ம் தேதி தன்னிச்சையாகப் போர்நிறுத்த அறிவிப்பு செய்தது! 1959 நவம்பர் 7-ம் தேதி இருந்த நிலைக்கே இருநாடுகளின் இராணுவமும் திரும்ப வேண்டும் என்பது இப்போர் நிறுத்த அறிவிப்பின் சாரமாகும். இதன்மூலம் சீனா – இந்தியா எல்லைப் போர் முடிவுக்கு வந்தது.

**போரின் விளைவுகள்**

சீன – இந்தியா எல்லைப்போர் இருநாட்டு, வெளிநாட்டு உறவில் திருப்புமுனை ஏற்படுத்தியது. இப்போரின் தாக்கம் சமகால இந்திய வரலாற்றில் பல பாதிப்புகளை உள்ளடக்கியது. இந்த அறிவிக்கப்படாப் போரின் **விளைவுகளாவன:** 1) சீனாவைப் பற்றிய நேருவின் மதிப்பும், மதிப்பீடும் பொய்த்துப் போயிற்று. 2) இந்திய இராணுவ, இராஜதந்திர, அரசியல் பலத்துக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது. 3) திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்தது. 4) இந்திய இராணுவத்தின் திருப்பித் தாக்கும் திறனைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. 5) கூட்டுச் சேராக் கொள்கை பலவீனமடைந்தது. 6) சீனாவின் செயல் பாகிஸ்தானும் காஷ்மீர்ப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காணலாம் என்ற தைரியத்தைக் கொடுத்தது.

**போரின் படிப்பினைகள்**

சீன – இந்தியப் போர் இந்தியாவுக்குப் பல படிப்பினைகளைக் கற்பித்துள்ளது. 1)வெளியுறவுக் கொள்கையில் நல்லெண்ணமும், தன்னம்பிக்கையும், நன்னடத்தையும் மட்டும் இருந்தால் மட்டும் போதாது. பொருளாதார, இராணுவ பலமும் இன்றியமையாதது. "அமைதியைப் பற்றிப் பேசும் போது துப்பாக்கியையும் தயாராக வைத்திருக்க வேண்டும்". 2) போரைத் துவக்கக் கூடாது. போர் திணிக்கப்பட்டால் அதை எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். 3) இந்திய இராணுவத்தை உலகத்தரத்துக்கு நவீனமயமாக்கி இந்திய எல்லைப் பகுதிகளை பலப்படுத்த வேண்டும். 4) இயற்கை மற்றும் மனித வளங்களை முழுவதுமாகப் பயன்படுத்திப் பொருளாதார வலிமையை உயர்த்த வேண்டும். 5) நெருக்கடி நேரத்தில் உதவ முன்வரும் நட்பு நாடுகளின் நட்பைப் பெற வேண்டும். 6) கூட்டுச் சேராக் கொள்கையை மறுபரிசிலனை செய்து மறுசீரமைக்க வேண்டும்.

**மதிப்பீடு**

இந்தியா – சீனா போரில் இந்தியா தோல்வி அடைந்ததற்கான முழுப் பொறுப்பையும் நேரு ஏற்க வேண்டியதாயிற்று. இத்தோல்விக்கு நேருவின் அணுகுமுறைகள் காரணம் என்றும், இந்திய நலனைக் காப்பாற்றத் தவறிவிட்டார் என்றும் நேரு நிந்திக்கப்பட்டார். சீனா ஏன் இந்தியாவுடன் எல்லைப் போர் தொடங்கி தன்னிச்சையாக நிறுத்திக் கொண்டது என்பது பற்றி இன்றைக்கும் விவாதிக்கப்படுகிறது! சீனாவின் நோக்கம் புரியாத புதிராக உள்ளது. **'இந்தியாவின் சீனப் போர்'** (India's China war) என்ற நூலை எழுதிய **நெவில் மாக்ஸ்வெல்** (Neville Maxwell) 1959லிருந்து நேரு பின்பற்றிய **'விரிவாக்கக் கொள்கை'** (Forward Policy)யே சீனாவின் சீற்றத்துக்கான காரணம் என்று கூறியுள்ளார். சீனா தன்னை முழு வல்லரசாகக் காட்டிக் கொள்ளவே இந்தியாவின் மீது படையெடுத்தாகக் கருதுகிறார் பிபன் சந்திரா. இந்தியாவை அவமானப்படுத்தி சீனாவின் நிலையை ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளிடையே உயர்த்திக் கொள்வதே சீனாவின் நோக்கம் என்று கருதுகிறார் பி.என்.பாண்டே. நேரு சீனாவின் விரிவாக்க நோக்கம் பற்றி நன்கு அறிந்திருந்த போதிலும் அண்டை நாடான சீனாவை விரோதித்துக் கொள்ள விரும்பவில்லை. இரு நாட்டுப் பிரச்சனையை இருதரப்புப்

பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதில் குறியாக இருந்தார். இராணுவப் பலத்தை விடப் பொருளாதார பலமே நாட்டுக்கு நல்லது என்பது நேருவின் நம்பிக்கையாக இருந்தது. இப்போரின் போது அமெரிக்காவும் ரஷ்யாவும் சீனாவை ஆதரிக்கவில்லை என்பது நேருவின் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். சீனா 'நம்பிக்கைத் துரோகம்' செய்து விட்டதாகக் கருதுகிறார் துர்க்காதாஸ். இந்தியா - சீனா போர் தேசப்பற்றைப் புதுப்பித்து நாட்டு ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார் சசிதரூர். இப்போர் இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. இக்கண்ணோட்டத்துடன் பார்க்கையில் இந்தியா - சீனா போரில் சீனா வெற்றி பெற்றாலும் இந்தியா தோற்கவில்லை என்று கூறலாம்.